
# வெள்ளிமலை

வலிகாமம் பிரதேச வளங்கள், திறன்கள்
வெளிக்காட்டிடும் சஞ்சிகை



சித்திரை - ஆடி
2007





30/-

உ

# வெள்ளிமலை

வலிகாமம் பிரதேச வளங்கள், திறன்கள்
வெளிக்காட்டிடும் சஞ்சிகை

மலை : 01 சித்திரை - ஆடி 2007 வெள்ளி : 01

இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வுவேண்டில்
புத்தக சாலைவேண்டும் நாட்டில்யாண்டும்
- பாவேந்தர் பாரதிதாசன் -

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின்
சுன்னாகம் பொதுநூலகம், உடுவில் பொதுநூலகம்,
ஏழாலை பொதுநூலகம் இவற்றின் வாசகர் வட்டங்களின் வெளியீடு.

இணை ஆசிரியர்கள்
க. சௌந்தரராஜன் கு. பா. விஜயகுமார்

அச்சுப்பதிப்பு:
கிருஸ்ணா பிறிண்டேர்ஸ்,
டாக்டர். சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.



தொடர்புகளுக்கு .......
நூலகர்
சுன்னாகம் பொதுநூலகம்
சுன்னாகம்.

நூலகர்
உடுவில் பொதுநூலகம்
மருதனார்மடம்.

# எண்ணச்சாரல்

**அன்பார்ந்த வாசக நெஞ்சங்களே! வணக்கம்.**

யாழ்குடாநாட்டின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள வலிகாமம் பலதுறை சார்ந்தும் முக்கியத்துவம் உடைய பிரதேசம். 286 சதுர கிலோமீற்றர் பரப்பளவையுடைய இதன் வடக்கு, மேற்கு, பகுதிகள் பாக்குநீரிணையையும், தெற்கு யாழ்ப்பாணக் கடனீரேரியையும், கிழக்கு தொண்டமானாற்று கடனீரேரியையும், எல்லைகளாகக் கொண்டுள்ளன. நிருவாக அடிப்படையில், வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்கு என ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் ஐந்து உள்ளூராட்சி அமைப்புக்களாக ஐந்து பிரதேச சபைகளையும் கொண்டுள்ளன.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுண்ணாகம் பட்டணசபை, ஏழாலை கிராமசபை, உடுவில் கிராமசபை ஆகிய முன்னைய உள்ளூராட்சி சாபைகளின்30 கிராமங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரதேச மக்களுக்கான பல்வேறு சேவைகளை பிரதேச சபை வழங்கி வருகின்றது. அவற்றுள் பொதுநூலக சேவையும் ஒன்றாகும். அவ்வகையில் நூலக சேவைகளைப் பயன்படுத்தும் வாசகர்களை ஒன்றிணைத்துச் செயற்படும் வாசகர் வட்டம் இவ்வாண்டில் தமது செயற்றிட்டமாக பிரதேசத்தின் அறிவு, திறன், ஆக்க முன்னெடுப்புக்களை வெளிக்கொணரும் நோக்குடன் வெள்ளிமலை காலாண்டுச் சஞ்சிகையை வெளியிட முன்வந்துள்ளது.

பிரதேச வரலாற்றை ஆராயும் போது இலக்கியங்களின் ஊடாகவே பல தகவல்களைப் பெறுகின்றோம். கணிசமான படைப்பாளிகளைக் கடந்த காலத்தில் கொண்டிருந்தது போலவே நிகழ்காலத்தில் இப்பிரதேசம் புலம்பெயர் நிலையிலும் கொண்டுள்ளது. கிராமம், பட்டினம், நகரம் என்ற வரிசையில் உலகளாவிய தொடர்புகனைள இப்பிரதேசம் பெற்றுள்ளது. ஒரு சமூகத்தின் அல்லது பிரதேசத்தின் இருப்பினைப் பதிவு செய்து வைக்கவேண்டிய தேவை நூலகங்களுக்கு உண்டு. அடையாளப்படுத்தி வைக்கவும், வலிமை ஊட்டி வளர்த்தெடுக்கவும், சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டாலேயே வளர்ச்சி எய்தலாம்.

பலதுறை சார்ந்த பயன்தரு நூல்களையும் மாணவர்கள் வாசிக்கத் தூண்டப்படவேண்டிய நிலை உருவாகி வருகின்றது. அதே சமயம் படைப்பாளிகள் இலைமறை காய்களாக மறைந்து போய் விடாமல் வெள்ளி மலை மீது அகலாக ஏற்றி வைக்கப்பட வாய்ப்பளிக்க வேண்டியுள்ளது. வாசகர் மட்டுமின்றி இப்பிரதேச மக்களின் பங்கேற்புடனான வெளியீடாக இதனை ஆதரிப்பது எல்லோரினதும் கடமையும் பொறுப்புமாகும்.



# வலிகாமம் தெற்கு பிரதேச சபைச் செயலாளரின் செய்தி

தேசத்தின் வளர்ச்சி சிறப்பாக அமைவதற்கு கல்வி அறிவு அவசியமாகும். அதனாலேயே உலகநாடுகள் யாவும் கல்வி அறிவை மேம்படுத்த முனைந்து நிற்கின்றன. எமது தேசத்தில் எழுத்தறிவு வீதம் உயர்வாக இருக்கின்றது. அதேசமயம், அறிவு என்பது பரந்துபட்ட துறைகளுடன் சம்பந்தப்பட்டுள்ளது. அறிவைப் பெறும் சாதனங்கள் பலவகைப்படுகின்றன. நூல்களினூடாகவும், நவீன தொடர்புச் சாதனங்களினூடாகவும் அறிவை, தகவல்களை சமூகத்தின் பலதரப்பட்டவர்களும் தேடிப் பெறுகின்றார்கள்.

அவ்வாறான அறிவைப் பெற உதவும் நிறுவனங்களும் உள்ளூராட்சி மன்றங்களின் பொதுசன நூலகங்களும் கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றன. வடக்கு கிழக்கு மாகாண மட்டத்திலே உள்ள பிரதேச சபைகளில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சிறந்த சபையாகத் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளது. எமது பிரதேச மக்களின் வாழ்வியற் செயற்பாடுகள் பலவற்றிலும் இப்பிரதேசசபை தன்னாலான வழிவகைகளில் மேம்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

அவ்வகையில் கல்வியூட்டலுக்கு உதவும் நோக்கில் முன்பள்ளிகள், பொதுசன நூலகங்கள் என்பவற்றைச் சமூகப் பண்பாட்டிற்காக அமைத்து நிர்வகித்து வருகின்றது. சுன்னாகம் பொதுநூலகம் இற்றைக்கு 45 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டு, இப்பிரதேச மக்களின் கல்விக்கும் பொழுதுபோக்கு வசதிக்கும் அளப்பரிய சேவைகளை வழங்கி வருகின்றது.

உடுவில் பொதுநூலகம் இற்றைக்கு 43 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது. நூலக ஆலோசனைக்குழுக்கள், வாசகர்வட்டம் என்பவற்றின் சிபார்சுகளுக்கமைய சஞ்சிகை வெளியீடு செய்ய பலகாலமாகவே முயற்சிக்கப்பட்டது. தற்போதைய அசாதாரண நிலைமைகள் காரணமாக முயற்சியைப் பூரணப்படுத்தி அச்சுப்பிரதியாக வெளியிட முடியாத நிலையில் கையெழுத்து பிரதியாக 2006 தேசிய வாசிப்பு மாதத்தில் வெளிக்கொணர எமது சபை நூலகங்களின் உத்தியோகத்தர்கள் பாடுபட்டுள்ளார்கள். இவர்களின் இப்பணியை மிகவும் பாராட்டுகின்றேன். 2007 ஜுலை உள்ளூராட்சி வார நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக வாசகர் வட்டங்களின் மூலம் வெள்ளிமலை அச்சுப்பிரதியாக வெளிவருகிறது. இதனை வெளியிட உதவியுள்ள வாசகர் வட்டத்தினர், விளம்பரதாரர்கள், எழுத்தாளர்கள் யாவருக்கும் எமது சபையின் நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

பிரதேசத்தின் அனைத்து துறை வளர்ச்சிகளுக்கும் ஆக்க இலக்கியத் துறைக்கும் வாசிப்பு மேம்பாட்டிற்கும் இவ் வெளியீடு உறுதுணை செய்யும் என நம்புகின்றேன்.

திருமதி. சு . சொக்கலிங்கம்
செயலாளர்

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
16.07.2007



# நேரம் பொன்னானது

**ம.க.ஸ்ரீதரன்**

நாம் இன்று நவீன யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வீட்டிலோ சமையலறையிலோ, காரியாலயத்திலோ அல்லது எவ்விடத்திலென்றாலும் நவீன மின்சாதனங்கள் மூலம் இலகுவாக மிகக்குறுகிய நேரத்தினுள் செய்து முடிக்கக்கூடிய வசதியுடன் நாம் வாழ முடிகின்றது. இதனால் பெருமளவு நேரவிரயம் தவிர்க்கப்படுகின்றது. கடந்து போனநேரம் ஒரு பொழுதும் திரும்பி வராது. ஆதலால் ஒவ்வொரு நிமிடத்தையும், மணித்தியாலத்தையும் நாம் மிகவும் அவதானமாகக் கழிக்கவேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

இன்று நாம் யாருடனும் எதைப்பற்றியாவது வினவினால் அவர்களிடமிருந்து எமக்கு கிடைக்கும் பதில் நேரமில்லை என்பதாகும். இது ஒரு இலகுவான பதில். ஒரு செயலைச் செய்யாது தட்டிக்கழிக்கவோ அல்லது அதில் ஈடுபாட்டைத் தவிர்க்கவோ இந்த நேரமில்லை என்னும் சொல் பெரிதும் பாவிக்கப்பட்டு வருகின்றது. நாம் சற்றுச் சிந்திப்போமானால் ஒருவர் நேரமில்லை என்று கூறுவது ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தல்ல. நமக்குத் தேவைப்படும் நேரத்தை உருவாக்க வேண்டியது நாமேயன்றி நேரமல்ல. நேரமானது தன் கடமையைச் சரிவரச்செய்து ஒரு வினாடியேனும் நிற்காமல் ஓடிக் கொண்டே இருக்கின்றது. ஆனால் மனிதர்களில் பெரும்பாலானோர் சோம்பேறித்தனத்தால் நேரமில்லை எனக்கூறி வீணே காலத்தை கழிக்கின்றனர். ஒரு நாளில் பெரும்பகுதியான நேரத்தை நாமே விரயமாக்கி வீண்பொழுதைப் போக்குகின்றோம் என்பது எமக்குத் தெரியாது.

அவற்றுள் சில பின்வருமாறு :-

1. வீண் அரட்டையடித்தல்.
2. நாள் முழுவதும் தொ(ல்)லைக்காட்சிப்பெட்டி முன் இருப்பது.
3. பகற் பொழுதில் பெரும் பகுதியை நித்திரைக்குச் செலவிடுதல்.
4. தேவையற்ற விடயங்களில் தலையிட்டு பிரச்சனைகளை வாங்கிக்கொண்டு யோசித்துக் கொண்டேயிருத்தல்.
5. நண்பர்களுடன் தேவையில்லாத சகவாசங்கள்.

மேற்குறிப்பிட்ட விடயங்களை நாம் குறைத்துக்கொண்டோமானால் பெருமளவு நேரத்தை மீதப்படுத்தலாம். இதை நாம் சிறிய விடயமென அசட்டை செய்யாது கவனத்திற் கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் ஒரு வாக்கியத்தை அடிக்கடி சொல்லுவார்கள். **"TIME WEASTE IS LIFE WEASTE"**. அதாவது நேரத்தை வீண்விரயம் செய்தல் வாழ்க்கையை வீண்விரயம் செய்தல் என்பதாகும். எனவே நேரத்தின் மகிமையை உணர்ந்து நாம் தேவையற்ற விடயங்களுக்கு நேரத்தை ஒதுக்குவதைத் தவிர்க்க வேண்டும்.



மாணவர்களாயிருப்பின் அவர்கள் அன்றாடம் தமது கடமைகளை இலகுவாகவும் சரிவரச்செய்யவும் ஒரு நேர அட்டவணையைத் தயார் செய்து வைத்துக்கொண்டு அதன்படி ஒழுகினால் மிகவும் நன்றாக இருக்கும். இதனால் அவர்கள் தமது கடமைகளை எவ்வித பதட்டமும் இன்றி ஒரு திட்டமிட்ட (PREPLANNING) செயற்பாட்டுடன் செய்யமுடியும். இப்படிச் செய்வது அவர்களின் வருங்காலத்திற்குப் பெரிதும் உதவியாயிருக்கும்.

சாதாரணமாக இன்று நாம் அரச அலுவலகங்களுக்கு ஏதும் தேவை நிமிர்த்தம் சென்றால் அவர்கள் எமது தேவையை உடன் பூர்த்தி செய்து தருவது வெகு அபூர்வம். 'தற்சமயம் நேரமில்லை, சிறிது நேரம் கழித்து அல்லது சில தினங்கள் கழித்து வருகை தாருங்கள்' எனத்தான் கூறுவார்கள். இதனால் முதியோர், சுகவீனமுற்றோர், தூர இடங்களிலிருந்து வருகை தந்தோர் படுந் துயரம் சொல்லுந்தரமன்று. நாம் எம்மால் மற்றவர்களுக்குச் செய்யக்கூடிய உதவிகளைப் பிற்போடாமல் நேரகாலத்துடன் செய்து முடிக்க வேண்டும். மக்கள் சேவையே மகேசன் சேவை. இதன் மூலம் நாம் இரு பகுதியினரின் நேரமும் வீண்விரயமாவதைத் தடுக்கலாம்.

இச் சந்தர்ப்பத்தில் எனது காரியாலய அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். யாழ்மாவட்டத்திலுள்ள ஒரு பிரபல உற்பத்திக் கூட்டுத்தாபனம் ஒன்றில் நான் 38 வருடங்கள் கணக்குப் பகுதியில் லிகிதர், பிரதம லிகிதர், கணக்காளர் என்ற பதவிகளில் கடமையாற்றியுள்ளேன். அப்பொழுது எமது கூட்டுத்தாபனத்தின் மொத்த ஆளணித்தொகை அண்ணளவாக 1500 இருக்கும். மாதாந்தம் இவர்களுக்கு ஏற்படும் சம்பளப் பிரச்சினைகள், கொடுப்பனவுக் குறைபாடுகள் பற்றி அனேக ஊழியர்கள் எம்மிடம் வருவார்கள். எவரையாவது நாம் திருப்பி விடுவதில்லை. எமது நேரத்தையும் பொருட்படுத்தாது மதிய போசன நேர அளவையும் குறைத்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதிலே மிகவும் அவதானமாயிருந்தோம். ஏனெனில் ஒரு உற்பத்தி ஸ்தாபனமொன்றில் சில ஊழியர்கள் தமது நாளாந்த கடமை நேரத்தினின்றும் விலகினால் அதனால் ஏற்படும் பாதிப்பு அங்கு வேலை செய்யும் சகல ஊழியர்களையும் பாதிக்கவல்லது. ஆதலால் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு நாம் எந் நேரமும் முன்னுரிமை கொடுத்து அவர்களின் நேரத்தையும் வீணாக்காது உடனுக்குடன் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தோம். இப்படியான பிரச்சினைகளை நமது நேரத்தையும் கணக்கில் கொள்ளாது நேரகாலத்திற்கு முடித்துக் கொடுத்ததன் பிரதிபலனாக லிகிதராக கூட்டுத்தாபனத்தில் சேர்ந்த யான் கணக்காளராக வரமுடிந்தது. இதற்கு மூலகாரணம் நேரத்திற்குக் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதாகும். முடிந்த வரையில் நாம் எந்தப்பிரச்சினைகள் வந்தாலும் நேரகாலத்துடன் அவற்றிற்கு முகம் கொடுத்தோமானால் மிகவும் இலகுவாக அவற்றைத் தீர்த்து விடலாம். கடைசி வரையும் எப்பிரச்சினைகளையும் தட்டிக்கழிக்கக்கூடாது. அதுமட்டுமல்ல, எனது 38 வருடகால சேவையில் நேரம் தவறாது காரியாலயத்திற்கு வருகை தந்தவர்களின் பட்டியலில் இடம் பெற்றவர்களில் யானும் ஒருவன். நேரம் தவறாமை (PUNCTUAUTY) என்பது

மிகவும் முக்கியமான விடயமாகும். உதாரணமாக காரியாலய வேலைகள் காலை 8-45 க்கு ஆரம்பிப்பதென்றால் நாம் ஆகக்குறைந்தது காலை 8-30 ற்காவது காரியாலயத்திற்குச் சமுகமளிக்க வேண்டும்.

எனது பழக்க தோசம் என்னவோ இன்றும் சேவையினின்று இளைப்பாறிய பின்னரும் ஒரு நேர அட்டவணையுடன்தான் எனது நாளாந்த கடமைகளையாற்றுகின்றேன். இதனால் நேரமானது வீண்விரயமாகாது தவிர்த்துக்கொள்கின்றேன்.

இன்றைய இளைஞர் சமுதாயம்தான் நாட்டின் நாளைய வழிகாட்டிகள். அவர்கள் தங்கள் நேரத்தைப் பொன்போற் பேணவேண்டும். ஒரு நற்பிரஜையாக வரக்கூடிய செயற்பாடுகளுக்கோ, சேவை மனப்பான்மை கொண்ட நோக்கத்திற்கோ, பொது நூலகங்களிற்குச் சென்று அறிவை விருத்தி செய்யும் நூல்களை வாசிப்பதிலோ தமது நேரத்தை மாணவ சமுதாயம் செலவழிக்கலாம்.

நேரம் நம்மைத்தேடி வராது. நாம்தான் நேரத்தைத் தேடிப்பிடிக்க வேண்டும். இனியாவது காலம் தாழ்த்தாது ஒரு நேர அட்டவணை மூலம் நாம் எமது காரியங்களைச் செயற்படுத்துவோமானால் நாமும் முன்னேறலாம். வீடும் முன்னேறும். நாட்டிலிருக்கும் சமுகங்களும் இதனைப் பார்த்து திருந்த வழிபிறக்கும். தாமதியாது துரித கதியில் செயற்படுத்துவோமாக.

**"TIME IS MORE PRECIOUS THAN MONEY"**

**"நேரமானது பணத்திலும் பார்க்க அதிக பெறுமதி வாய்ந்தது"**




**வலிதெற்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி வாரம் 2007 மருத்துவ முகாம் ஆரம்பவைபவம்**



# சுன்னை நகர்: ஒரு சிறு குறிப்பு



பழமையும், புதுமையும் நிறைந்தது சுன்னை நகரம். பல ஆலயங்களையும், அறிஞர்களையும், புராதன சின்னங்களையும், அறிவு வளர்க்கும் கல்விக்கூடங்களையும் கொண்டது. சுன்னை நகர் குமாரசாமிப்புலவர் என்ற அறிஞரை உருவாக்கித் தந்த இடம். சுன்னாகத்தின் நாற்சந்தியில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் வீதி குமாரசாமிப்புலவர் வீதி என்பதையும் குறிப்பிட முடியும். இது மருவி வருவதை அவதானிக்க முடிகிறது. சுன்னாகம் (வலி. தெற்கு) பிரதேச சபை பல கிராமங்களை உள்ளடக்கியது. புராதன இடமாகிய கந்தரோடை, ஏழு ஆலயம் உடைய ஏழாலை, குப்பிளான், இணுவில், உடுவில் என இவ்வாறு குறிப்பிடலாம்.

கந்தரோடையில் புராதன சின்னங்களைக் காண முடிகிறது. உக்கிரராசசிங்கன் ஆட்சி செய்த இடம் கதிரமலை எனவும், இது குமாரசாமிப் புலவர் வீதியில் உள்ள கதிரமலை என்னும் இடம் எனவும், சில குறிப்பேடுகளில் அறிய முடிகிறது. அது மட்டுமின்றி உக்கிரராசசிங்க மன்னன் வழிபட்ட ஆலயம் கதிரமலைச் சிவன்கோயில் எனவும், அறிய முடிவதுடன் இது தொடர்பாக இந்த ஆலயத்தின் தேரின் சிற்பங்கள் சான்று பகர்கின்றன.

கல்வி அறிவூட்டும் கல்லூரிகளாக சேர். பொன். இராமநாதனின் வழிகாட்டலில் ஸ்தாபித்த இராமநாதன் கல்லூரி, கந்தையா உபாத்தியார் வள்ளலினால் உருவான ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கிறிஸ்தவ பாடசாலையான உடுவில் மகளிர் கல்லூரி என்பனவற்றைக் காண முடிகிறது.

**மு. செல்வஸ்தரன்**

அறிஞர்கள் வரிசையில் மயிலணி குமாரசாமிப் புலவர், மற்றும் முருகேச பண்டிதர் போன்றோர் சுன்னாகத்திற்குப் பெருமை சேர்த்தவர்கள். அறிவுப் பொக்கிஷத்தை வளர்க்கும் மிகவும் பயனுள்ள நூல் நிலையத்தையும் இங்கு காண முடிகிறது. மற்றும் பிரபல்யம் வாய்ந்த சுன்னாகம் சந்தை, புகையிரத நிலையம், வங்கிகள், பழமை வாய்ந்த தபாற்கந்தோர் போன்றவையும் இங்கு காணப்படுகிறன.

ஆலயங்களைப் பார்க்கும் போது சுன்னாகம் நகரை அண்மித்த நகர மத்தியில் முனியப்பர் ஆலயம், பிரபல்யம் வாய்ந்த வான் உயர்ந்த கோபுரத்தைக் கொண்டதும், புராதன

வரலாற்றையும், பழமை வாய்ந்த சுமைதாங்கியையும் தன்னகத்தே கொண்டு ஸ்ரீ கதிரமலை தேவஸ்தானம் என்பன காணப்படுகின்றன. இவ்வாலயம் உத்திரராச சிங்க மன்னனால் வணங்கப்பெற்ற ஆலயம் என அறியமுடிகிறது.

தெற்கே சிவபூதவராயர் ஆலயம், வயல் வெளியில் கோடேறிச் சாட்சி சொன்ன ஐயனார் தேவஸ்தானம், அருகில் சந்திர சேகரப் பிள்ளையார், வடக்கே மயிலணி கந்தசாமி கோயில், சிவன் கோயில் இவ்வாறு பல ஆலயங்களையும் கொண்டு சுன்னாகத்திற்கு ஆலயங்கள் பெருமை சேர்க்கின்றன.

நகருக்குள் நான்கு ஆரம்பப் பாடசாலைகளைக் காணலாம். உடுவில் தமிழ் மான்ஸ் பாடசாலை, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை, சுன்னாகம் றோ. க. த. க. பாடசாலை, சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாலயம் என்பனவாகும். இவை நகரில் வாழும் சிறார்களின் ஆரம்பக் கல்விக்கு வித்திடுவதைக் காண முடிகிறது. நிறைவாக இன்றைய சுன்னாக நகரின் வளர்ச்சியில் ஆலயங்கள், வர்த்தக நிலையங்கள், பல. நோ. கூ. சங்கம், அரச, தனியார் வங்கிகள், அரச நிறுவனங்கள் என்பவை பொது மக்களிற்குத் தமது பங்களிப்பை வழங்கி வருவதைக் காண முடிகிறது. மேலும் இந்த நகர வளர்ச்சியில் திரு. வி. தர்மலிங்கமும் (முன்னாள் உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்) இந் நகர பிதாவாகவும், பட்டண சபைத் தலைவராகவும் இருந்த அமரர் பொன். நாகலிங்கம் அவர்களின் சேவைக்காலமும் பொற்காலங்கள் எனக் குறிப்பிடலாம். இவ்வாறு பல சிறப்புக்களைச் சுன்னை நகர் பற்றிக்குறிப்பிட முடியும். ▭

---

❖ **வாசித்தல் ஒரு கலை, சிந்தித்தல் ஒரு கலை,**
**எழுதுதலும் ஒரு கலையே.** – *சாள்ஸ்லாம்ப்*


❖ **கல்வியினாலே பெருந்தொகையான மக்கள் வாசிக்கக்கூடியவர்களாக விளங்கினாலும், தாம் வாசிப்பனவற்றிலே எவை வாசிக்க வேண்டியவை என்பதைப் பிரித்தறிய முடியாதுள்ளனர்.** – *ஜி.எம். றெவெலியன்*

❖ **நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற**
**நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு** – *ஒளவையார்*



## வித்துவசிரோமணி புன்னாலைக்கட்டுவன்
# பிரம்மஸ்ரீ சி. கணேசையர்
*(01-04-1879 - 08-11-1958)*

**ம. துஷ்யந்தன்**



ஈழத்தின் முது பெரும் தமிழறிஞர்களிலே கணேசையருக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உண்டு. யாழ்ப்பாணத்துப் பாரம்பரியம் மிக்க புன்னாலைக்கட்டுவனில் ஐயரவர்கள் பிறந்தது எமக்கெல்லாம் பெருமை. ஆறுமுக நாவலரின் மருகரான வித்துவசிரோன்மணி பொன்னம்பலம் பிள்ளையிடம் வரன்முறையாக ஐயர் பாடங்கற்றார்.

கணேசையரின் பணிகள் பன்முகப்பட்டவை. சிறந்த போதனாசிரியராக விளங்கிய ஐயர் நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், உரைநடையாளராகவும், அருமையான ஆய்வாளராகவும், கண்டனப் பேரறிஞராகவும், சோதிடசாஸ்திர வல்லுனராகவும் செய்யுள்களை இயற்றும், கவிபாடும் புலமை மிக்கவராகவும் திகழ்ந்தார். ஐயரை ஈழமும் தமிழகமும் பாராட்டிப் போற்றி மதித்து வந்தது.

ஐயரது பணிகளிலே மிகச் சிறந்த பணியாகக் கொள்ளக் கூடியது தொல்காப்பிய உரை விளக்கமேயாகும். "தொல்காப்பியக் கடல்" என்று போற்றப்பட்ட ஐயரவர்கள் தொல்காப்பிய நூற்பாவில் கருகலான இடங்கள், உரைகளிலே முரண்பாடுகள் காணப்பட்ட இடங்கள் என்பனவற்றைச் சரியாகத் தெளிவுபடுத்தினார். தொல்காப்பிய நூற்பாக்களிலே காணப்பட்ட பாடபேதங்கள் பலவற்றைச் சரியான முறையில் இனங்கண்டு வெளிப்படுத்திய பெருமை ஐயரையே சாரும்.

ஐயரவர்கள் மேலும் பல நூல்களுக்கும் சிறப்பான உரைகளை எழுதியுள்ளார். ஈழநாட்டின் தாய்க்காப்பியமான இரகுவம்சம், மகாபாரதம் சூது போர்ச் சருக்கம், ஒருதுறைக் கோவை, அகநானூறு களிற்றுயானைநிரை என்பன குறிப்பிடத்தக்கவை. மேலும் ஈழநாட்டு தமிழ்புலவர் சரிதம், குமாரசுவாமிப் புலவர் சரிதம் எனும் நூல்களையும் இயற்றி உள்ளார்.

கவிபாடும் வல்லமை மிகுந்த ஐயரவர்கள் புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் மீது திருவூஞ்சல் பாமாலை இயற்றியுள்ளமை இவ்விடத்தில் விதந்து குறிப்பிடத்தக்கது. ஐயராவர்கள் ஆயாக் கடவையான் மீது தீராத அன்பும் பத்தியும் கொண்டவர். மலர் மாலைகள்,

பட்டாடைகள், நவரத்தின ஆபரணங்களோடு ஆயாக்கடவையான் திருவீதியுலா வருகையில் அவருக்கு வெள்ளியிலான முடிதரிக்கப்படுவது வழக்கம். இதைக்கண்டு நவரத்தின ஆபரணங்களோடு தங்கக் கிரீடம் அல்லவா இறைவனுக்கு சூட்டப்பட்ட வேண்டும்? என்று கூறி தனக்கு வழங்கப்பட்ட பொற்கிழி நிதியைக் கொண்டு விநாயகப்பெருமானுக்கு தங்கக் கிரீடம் சூட்டிமகிழ்ந்தவர் மகாவித்துவான் கணேசையர்.

நல்லூர்க் கந்தசாமி கோவிலில் ஆறுமுக நாவலர், வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளை ஆகியோர் பொருள் கூறிய கந்தபுராண படனம் எவ்வளவு பிரபல்யம் பெற்றதோ, அதேபோல கணேசையர் பயன் சொன்ன எமது ஆலய கந்தபுராண படிப்பும் முக்கியத்துவம் வாய்ந்தது. வசந்த மண்டபப்பூசை முடிந்ததும் அடியவர்கள் அமர்ந்திருக்க, நாதஸ்வர வித்வான்கள் நாதாஞ்சலி செய்ய, விநாயகப் பெருமான் ஊஞ்சலில் அமர்ந்து ஆடும்போது ஐயரவர்கள் இயற்றிய திருவூஞ்சற் பாடல்களை "சித்தியுறுவார்" என்று ஆரம்பித்து அவர்களே பாடும்போது பக்தர்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிரம்பும்.

1978 இல் தென்னிந்திய இசைவல்லாளர் சீர்காழி S. கோவிந்தராஜன் அவர்கள் எமது ஆலயத்திற்கு வருகை தந்தபோது ஐயரவர்கள் இயற்றிய ஊஞ்சற் பாடல்களையே முதலடியாகக் கொண்டு தனது இசைக்கச்சேரியை ஆரம்பித்தார். இன்றும் எமது ஆலய நிகழ்வுகளின் போது சீர்காழி பாடிய ஐயரவர்களது பாடல் ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பப்பட்ட பின்னரே ஏனைய அனுஸ்டானங்கள் நடைபெறுவது வழக்கமாக உள்ளது.

எங்கள் ஊரிற்கு என்றென்றும் பெருமை சேர்க்கும் ஐயரவர்களது திருவுருவச்சிலை எமது ஆலய முன்றலிலே சிறப்புற அமைந்துள்ளது. ஐயரவர்களது கீர்த்தியை நன்குணர்ந்த அறிஞர் பெருமக்கள் பலரும் ஆயாக் கடவையானை வழிபட்ட பின்னர் ஐயரவர்களையும் வழிபட்டுச் செல்வது கண்கூடு. ஐயரவர்களது திருவுருவச்சிலைத் திறப்பு விழா 1983-04-05 இல் இடம் பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### மற்றவரிடம் பேசுவது எப்படி?

- தாயிடம் அன்பாகப் பேசுங்கள்.
- ஆசிரியையிடம் பண்பாகப் பேசுங்கள்.
- சகோதரிகளிடம் அளவோடு பேசுங்கள்.
- துணைவியிடம் உண்மையைப் பேசுங்கள்.
- குழந்தைகளிடம் ஆர்வமாகப் பேசுங்கள்.
- உறவினரிடம் பரிவோடு பேசுங்கள்.
- நண்பரிடம் கனிவாகப் பேசுங்கள்.
- அதிகாரியிடம் பணிவாகப் பேசுங்கள்.
- வியாபாரிகளிடம் கறாராக பேசுங்கள்.
- தொழிலாளரிடம் மனித நேயத்துடன் பேசுங்கள்.
- அரசியல்வாதியிடம் ஜாக்கிரதையாகப் பேசுங்கள்.



இன்றைய காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு விசா அனுமதி இல்லாமல் மக்கள் செல்ல முடியும் என ஒரு விளம்பரம் தொடர்பு சாதனங்கள் மூலம் வந்தால் என்ன நடக்கும் ? வடபகுதியில் யாரேனும் மிஞ்சுவார்களா? காரணம் தற்போதுள்ள சூழ்நிலை அப்படியாகவுள்ளது.

வெளிநாடுகளுக்குச் சென்றால் எம்மிடையேயுள்ள பிரச்சனைகள் யாவும் தீர்க்கின்றனவா? காலத்தின் ஓட்டத்தை அது கொண்டு வரும் மாற்றங்களைத் தடுக்க முடியாதுதான். வெளிநாடுகளில் நம்மவர் செய்யும் அட்டகாசங்களைப் புதினத்தாள்கள் மூலமாகவும், அந்நாடுகளுக்குச் சென்று வருபவர்களைக் கேட்டுப் பார்ப்பதன் மூலமாகவும் அறியலாம். மரணங்கள் மலிந்த உலகமாக மாறிவரும் உலகில் இன்று மக்கள் அமைதிக்காகவும், சமாதானத்துக்காகவுமே ஏங்கித் தவிக்கின்றார்கள். இந்த மண்ணின் வாழ்வில் தாங்கொணாச் சுமைகளால் அழுந்தும் மக்களினத்துக்கு எதனைத் தான் கூற முடியும்.

## மனித வாழ்வு ஏமாற்றமே தானா?

நன்றி

நவீன உலகில் அரசியற் செயற்பாடுகளினால் மானிடம் அழிந்துகொண்டே வருகின்றது. ஜனநாயகக் கோட்பாடுகளை அடிப படையாகக் கொண்டு ஆட்சிபுரியும் நாடுகளில் கூடுதலான மனித சுதந்திரம் ஆட்சிக் குழப்பங்களுக்கு வழிவகுத்து வருகின்றது. சமதர்மக் கோட்பாடுகளை ஆட்சித் தத்துவங்களாகக் கொண்ட நாடுகளில் கூடுதலான அடக்குமுறைகள் ஆட்சிக் குழப்பங்களுக்கு வழி வகுத்து வருகின்றன. சமதர்மக் கோட்பாடுகளில் மனுக்குலத்திற்கு நன்மை பயப்பனவற்றையும் ஒருங்கிணைத்து ஜனநாயக சோசலிச ஆட்சி புரியும் நாடுகளில் அரசியல் வாதிகளின் சுயநலம் ஆட்சிக் குழப்பங்களுக்கு வழிவகுத்து வருகின்றது.

நாம் எங்கே போகின்றோம்? 'நாங்கள் படித்தவர்கள் அறிவாளிகள் சூழலை வெற்றி கொள்ள முடியும்' என்ற சிந்தனையே மேலோங்கிய நிலையில் எமக்குள்ள அறிவு ஆக்கத்திற்குப் பயன்படுத்தப் படாமல் அழிவையே நோக்கிச் செல்கின்றது. இப்படியான நிலையில் கல்வி யாருக்கு வேண்டும்? நாகரீகம் யாருக்கு வேண்டும்? நவீன தொலைத் தொடர்புகளால் என்ன பிரயோசனம்? இவை இருந்தால்தான் வாழமுடியுமா எனச் சிந்திக்க வேண்டிய நிலையில் இன்றுள்ளோம். மனிதனுக்குள் எத்தனை ஏற்றத்தாழ்வுகள். வாழ்வு என்பது என்ன? பணம், வீடுவாசல், காணி, நவீன போக்குவரத்துச் சாதனங்கள், ஆடம்பரப் பொருள்கள் இருந்தால் வாழ்வு நிறைவாகி விடுமா? போதுமான உணவு, ஓர் எளிமையான வாழிடம், மானத்தை மறைக்க எளிய உடைகள்

இருந்தால் போதும் நிம்மதியான குடும்பவாழ்வு அமையும். மற்றவனைச் சுரண்டிச் சேகரித்து வைப்பதால் என்ன பயன்? தாமும் அனுபவிக்காமல் சேர்த்துவைத்த பொருட்கள் வருங்காலச் சந்ததியினருக்கு பிரச்சனைகளைத் தான் கொண்டு வரும். தேவைகளைக் குறுக்கிக்கொண்டு வாழ வேண்டியது இக்காலகட்டத்துக்கு மிகமிக அவசியமான நிலைப்பாடாகும். அமைதி, ஆத்ம திருப்தி, நிம்மதி தான் இன்றைய தேவை. கூடுதலான தேவை நிம்மதியற்ற வாழ்வையே கொடுக்கும்.


எமது கல்விமுறைகள் பணம் சம்பாதிப்பதற்கான இலக்கையே கொண்டுள்ளன. பெற்ற அறிவின் மூலம் வாழ்வின் பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடியதாக இருந்தாலே போதுமானது. கல்வி கற்காதவர்கள் இவ்வுலகில் வாழவில்லையா? இன்பம் அனுபவிக்கவில்லையா? நமக்கான விஞ்ஞான அறிவு உணவின்றி வாழவோ அல்லது உணவை உற்பத்தி செய்யும் இயந்திரங்களையோ கண்டுபிடிக்கக் கூடியதாகவுள்ளதா?

இன்றும் எமது புதினப் பத்திரிகைகளில் வெளியாகும் மணமக்கள் தேவை பற்றிய விளம்பரங்களில், மணத்தில் காணும் அவலநிலை புரியும். ஆண் பெண்களில் பார்வைகள் கூட நேர்மையற்று போகப்பொருட்களை அனுபவிக்க வேண்டுமென்ற கற்பழிக்கும் வெறிப்பார்வை யாழ்ப்பாணத்தவர் சாதி, சனம் பற்றிப் பேசிப்பேசியே வாழவும் தெரியாமல், வாழவும் விடாமல் பழம் பெருமையில் காலம் கழிப்பவர்கள் என்ற நிலைதான் காணப்படுகிறது.

தனிமனிதரிலும் பொது நலம் தான் பெரிது. அன்பு, பாசம், உறவு தான் இன்று நமக்குள்ள பிரதான தேவையாகும். பிறருக்காக வாழப் பழகுவதே நமது வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கும். அப்படியான காலகட்டத்தில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பணத்தால் அனைத்தும் பெறமுடியாது. வாழ்வை அனுபவித்தவர்களுக்குத்தான் இவ் உண்மையை நன்குணர முடியும். மரணம் வரவேற்கத்தக்கதல்ல. கொடியதுதான். இதற்குப் பயந்து வெளிநாட்டு மோகத்தினால் அழிவது சரியா? அங்கு போனால் எமது தனித்துவம் சிதைந்து அந்நாடுகளின் பண்பாட்டுக் கோலங்களில் மூழ்கி மனித வாழ்வுக்கு அர்த்தமே இல்லாது போய்விடும். "வாழ்வு என்பது போராட்டம்தான். கட்டுப்பாடான வழியில் சரியாக நம்மை வழி நடத்திக்கொண்டால் பண்பு வளரும். இல்லையென்றால் நேர்மாறான விளைவுதான் ஏற்படும்" என்கிறார் அறிஞர் பிளாட்டோ (Plato). ஆலோசனை நன்றாக இருந்தால் அதனை எவர் கூறினார் என்பது பற்றிக் கவலைப்படவேண்டாம்.

*"மற்றவர்கள் செய்ய முடியாததைச் செய்து முடிக்கும் ஆற்றலை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பெற்றிருக்கின்றார்கள்"*

*- பெர்னாட் ஷா*





# நடைபெறும் தொடர் கதை

அற்றைத் திங்கள் ஆரம்ப நாட்களில்
அனைத்தும் உடையோம் : ஆனந்த மடைந்தோம்:
சற்றுச் சில நாள் சென்றதே: நாட்டினில்
சங்கடம் கொண்ட சரித்திரம் திரும்பின:
முற்று முழுநாள் ஊரடங் கலுடன்
முழங்கின பீரங்கி : மோதல்கள் தொடங்கின :
சற்றும் ஓயாச் சண்டையா மென்றனர்.
அற்றது அமைதி : அடங்கின ஊர்களே.

நடப்பது எவையென நவின்றிட வழியில்லை :
நாடினர் பகலிடம் நல்லுயிர் பிழைத்திட.
கிடப்பவை கிடக்க. கிடைத்ததை எடுத்தே.
கிட்டினர் அயலகம் கிளையொடு அலைந்து.
அடைத்தனர் பாதை : அதுமுதல் வதை
ஆரம்பம் ஆனதே : அல்லல்கள் சூழ்ந்ததே.
கடைத்தெரு தேடியே கவலையில் ஓடினர் :
கண்டனர் கியூவினை. கடையில் நின்றனர்.

உழைப்பவன் உழவன் உத்தியோ கத்தோன்
ஒத்தும் ஆனான் : ஒத்தனர் அனைவரும்
ஒழுங்கினில் நின்றனர் : ஒரு பாண் [illegible]
[illegible]
[illegible]
[illegible] நின்றனர்
பழக்கமே மறந்த [illegible] தேடி
பாவையர் பூவையர் [illegible].

[illegible]
[illegible]
நாள்தொறும் மக்கள் [illegible] குறைந்தே.
[illegible]
[illegible]
[illegible]
சேரிடம் இல்லாச் சிறுமை நினைந்து
சிந்தை குழம்பச் சிறப்பை மறந்தோம்.

அரிசியொடு பருப்பும் அருஞ் சீனியுடன்
அமெரிக்கன் மாவும் அளந்தே வழங்கினர் :
உருசியொடு சோறு உவப்பான மீன்வகை
உண்டிட்ட மக்கள் அறுசுவை மறந்தார் :
நிறையும் குறையுது : நிதம்பல மறையுது:
நித்தமும் கடைப்படி காலால் நிறையுது :
தருபெரு மனத் தன்மையை நோக்கி
தவறுகள் குறைகள் தகவுடன் உரைக்கார்.

மின்சார வளமும் மின்னிக் குறைந்ததே :
மண்ணெய் தேடி மக்கள் அலைந்தார் :
சம்சார வாழ்க்கை சங்கடங் கொண்டிட
சாவுகள் மறைவுகள் சருதியாய்க் கூடின :
எரிபொருள் விலைகள் எகிறிட. மறைந்திட
எந்திர வண்டிகள் இயக்கம் குறைந்ததே !
எரிவாயு இல்லா நிலையினிற் பெண்டிர்
அடுப்பை ஊதி அவிந்தே பலம்பினர் !

நெடும்பாதை ஊடாக நடந்திட்ட பயணம்
தடையாகிப் போக : தமதிடஞ் சேர்ந்து
குடும்பத்துத் துயரைக் குறைத்திட மக்கள்
கூலிகொடு த்தரச அதிபரைச் சேர்ந்தார் :
"விடும்எம்மை போகவே : வழியினைத் திறவும்" :
வேதனைக் கூரலோடு விழிநீர் சொரிந்தார்
கொடும்பசி துயரோடு கற்றலை மறந்தே
கவலையைத் தீர்க்கும் கல்வியைத் துறந்தார்.

பத்திரிகை பக்கம் பாதி குறைந்தது !
பார்த்திட மக்கள் கூட்டம் நிறைந்தது !
சுத்தப் படுத்திட சோப்புக்கள் இல்லை !
சொல்லும் விலைகளால் இதயம் அதிருது.
எத்துதல். ஏய்ப்புகள் இயல்பே யானது :
ஏமலா ந்தியே இருப்பை இழந்தமே
வித்தைகள் மறைந்தன : விழாக்கள் குறைந்தன :
வீதியில் ஊடா ட்டம் மறந்தமே



வவுனியா நகரை அடைந்தவர் ஒருபால் :
வழிதிறந்து மன்னார் சென்றனர் ஒருநாள்.
தவமிகு தாண்டிக் குளமது தாண்டாத்
தமிழர்கள் திருமலை சேர்ந்தனர் ஒருநாள்.
கவனமுடன் காங்கேசன் வந்தவர் ஒருபால் :
நெடுந்தீவுத் துறை நண்ணினர் ஒருபால்
அவரவர் கவலைகள் அலை மோதிடவே
ஆற்றிடாத் துன்பந் தொடரும் நிலையே.

பகலில் விழித்து இரவில் உறைந்து
பதைக்கும் உள்ளப் பதட்டம் நிறைந்து :
முகநகை பொலிந்த அன்றைய நாளை
மீட்டுப் பார்த்து மூச்சது எறிய
அகம் நிறைநாளை அனைவரும் அடைய
ஆகும் வழியினை ஏங்கிடு வோரே !
தகவுறு வாழ்வைத் தமிழன் பெறும்வரை
நடைபெறு தொடர் கதை தொடருந் தானே!

## *மிக வேகமாக பரவி வரும்*
## *டெங்கு சிக்கன்குனியா நோய்களைத் தடுப்போம்*

டெங்கு, சிக்கன்குனியா காய்ச்சல்கள் வைரசினால் ஏற்படுகின்றது இவ்வைரசுகளை நுளம்புகள் பரப்புகின்றன. டெங்கு சிக்கன்குனியா காய்ச்சல்களின் அடையாளங்கள்

❖ தலைவலி ❖ வாந்தி ❖ உடல்வலி ❖ வயிற்றுளைச்சல்

❖ காய்ச்சல் 2 – 4 தினங்களில் குறைந்து நோய் குணமாகலாம். சிலருக்கு குருதிப்பெருக்கு ஏற்பட்டு உயிராபத்து ஏற்படலாம்.

*இதற்கு காரணமான நுளம்புகளை ஒழிக்க.......*

❖ வளவுகளில் சுற்றாடலில் செடிகள் பற்றைகள் என்பவற்றை அழிப்போம். நீர் தேங்கவிடாமற் கவனிப்போம்.

❖ வெற்றுப் பாத்திரங்களை வெற்றுப் பேணிகளை சிரட்டைகளை கோம்பைகளை பழைய ரயர்களை அகற்றுவோம்.

❖ தாழ்வாரப்பீலிகளில் மழை நீர் தேங்கவிடாது பீலிகளைத் துப்புரவு செய்வோம்.

❖ வடியாது வற்றாது தேங்கியுள்ள கழிவு நீர் நிலைகள் மீது கழிவு ஓயிலை ஊற்றுவோம் .

சுத்தம் பேணி சுகமாக வாழ்வோம் !

செயலாளர்
வலிதெற்கு பிரதேச சபை.
சுன்னாகம்.

"பட்ட காலிலேயே படும் கெட்ட குடியே கெடும்" என்ற முதுமொழிக்கேற்ப தற்போதைய சூழ்நிலையில் கொடிய வைரஸ் நோய் பரவி வருகின்றது. 1952ம் ஆண்டு ஆபிரிக்க நாடாகிய தன்சானியாவில் நிலவிய சுகாதார நிலையே தற்பொழுது யாழ் குடாநாட்டில் உள்ளது. மக்களின் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக காணப்படுகின்றது. இதனால் மிக இலகுவாக வைரஸ் நோய் தாக்கத்திற்கு ஆளாகின்றார்கள்.

மலேரியா, பிலேரியா, டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களைச் சில வகை நுளம்புகள் பரப்புகின்றன. அவ்வகையில் டெங்கும் சிக்குன்குனியாவும் அண்மைக்காலத்தில் அபாயகரமான அளவில் பரவி வருகின்றன.



# சிக்குன் குனியா



டெங்கு நுளம்பு

கு. றஜிதா

சிக்குன் குனியா நுளம்பு

இந் நோய்க்கான நோய்க் காரணி வைரஸ் ஆகும். நோய் காவி நுளம்பாகும். இந் நோயைப் பரப்பும் நுளம்புகள் ஏடியஸ் கியூலெக்ஸ் மன்சோனி எனக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் டெங்கு, சிக்குன் குனியா ஆகிய இரு நோய்களும் ஈடிஸ் எஜிப்டி {Aedes aegypti} இன நுளம்புகளால் பரப்பப்படுகின்றன. சில நாடுகளில் ஈடிஸ் சப்பிக்டஸ் {Aedes subpictus} வகை நுளம்புகளும் நோய்க்காவிகளாக காணப்படுகின்றன.

ஈடிஸ் எஜிப்டி இன நுளம்புகளை அவைகளின் உடலிலுள்ள புள்ளிகளைக் கொண்டு அடையாளம் கண்டுகொள்ளலாம். அத்துடன் இவை விடாமல் திரும்பத் திரும்பக் கடிக்கக்கூடியவை.

இந் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களாவன :-

* சுத்தமான நீரைக்கொண்ட சிறிய நீர்க் கொள்கலன்கள்
* பொலித்தீன் பைகள்
* தகரப்பேணிகள்
* தேங்காய்ச் சிரட்டைகள்
* கோப்பைகள்
* கழிக்கப்பட்ட ரயர்கள்
* சிறிய கழிவு நீர்த்தேக்கங்கள்
* நீர் சேமிக்கும் பாத்திரங்கள்
* மீனற்ற மீன் தொட்டிகள்
* நீருள்ள பூச்சாடிகள்
* மலசலகூட நீரடைப்புகள்
* குப்பை நிறைந்த தண்ணீர் பீலி
* வெடித்த மலசலகூடக் குழிகள்

போன்ற சிறிய அளவில் நீர் சேர்ந்திருக்கும் இடங்களாகும். நீரிலிடப் படும் முட்டை களிலிருந்து இவ்வகை நுளம்புகள் உருவாகின்றன.

இவற்றில் உருவாகும் நோய்க்காவிகள் மூலம் ஏற்படும் சிக்குன் குனியா நோயின் அறிகுறிகளாவன:



o தலைவலி
o கடுமையான காய்ச்சல்
o வாந்தி
o தோலில் செந்நிறப்புள்ளிகள்
o கணுக்கால் வீக்கம்
o உடல்வலியும் நோவும்
o எலும்பு நோ அல்லது மூட்டு நோ

போன்ற அறிகுறிகளுடன் சிலருக்கு நிணநீர் கணுக்கள் வீங்கியும் காணப்படுமென கூறப்படுகிறது.

நான்கு, ஐந்து நாட்களில் இக்காய்ச்சல் குணமடைகின்ற போதிலும் அதன் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கு இரண்டு வாரங்களாவது எடுக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. அதேசமயம் இந்நோயினால் உயிராபத்து இல்லை எனப்பட்டாலும் வேறு நோய்களின் தாக்கத்திற்குட்பட்டவர்களை இந்நோய் மிகவும் பாதிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

சிக்குன் குனியா நோயிலிருந்து தப்பிக்கொள்ள நாம் சில செயல்முறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக உள்ளோம். முற்காப்பு நடவடிக்கைகள் மூலம் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும்.

**1. நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவது:**

நுளம்புகள் உற்பத்தியாகி வளரும் இடங்களை அகற்றுதல், அழித்தல் மூலம் இவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். மழைக்காலம் ஆரம்பிக்கு முன் தேவையற்ற சிறிய கொள்கலன்களைப் புதைத்தல், அழித்தல். கழிவுநீர்த் தேக்கங்களைத் துப்பரவு செய்தல். மீன் அற்ற தொட்டிகளை வெறுமையாக்கிவிடுதல். நீர்த்தாங்கிகளை அடிக்கடி வெறுமையாக்கி நீர்சேகரிப்புக்குப் பயன்படுத்துதல். பாவனைக்குதவாத கைவிடப்பட்ட ரயர்களை மண்ணினால் நிரப்பிவிடல். குளிர்சாதனப்பெட்டியில் நீரை சேகரிக்கும் தட்டுகளில் சேகரமாகும் நீரை அகற்றுதல். வெடிப்புள்ள மலசலக்குழிகளைத் திருத்தியமைத்தல்.

**2. நுளம்புக் கடியிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது:**

நுளம்புகள் சிறிய புதர்களிலிருந்து வந்து மனிதரைக் கடிக்கும். வெவ்வேறு இன நுளம்புகள் வெவ்வேறு நேரங்களில் கடிக்கின்றன. ஈடிஸ் இன நுளம்புகள் மாலை வேளையிலும் காலை வேளையிலும் அதிகம் கடிக்கின்றன. இந்நேரங்களில் வீட்டுக்கு வெளியில் இருந்தால் உடலை மூடும் வண்ணம் உடை அணிந்து இருத்தல் வேண்டும். மலேரியா நோய்த்தடுப்பு போன்றே டி.டி.ரி, மலத்தியோன் கிருமிநாசனிகளைப் பாவித்தல் வேண்டும். வீட்டின் சுற்றுச்சூழலைச் சுத்தமாகப் பராமரிக்க வேண்டியது அவசியமாகும். மாலை வேளையில் ஜன்னல் கதவுகளை மூடிவைத்தல் வேண்டும். புகையூட்டுவதன் மூலம் நுளம்பு கடிப்பதை ஓரளவு குறைக்கலாம். நுளம்புவலைப் பாவனை அவசியமாகும்.

எனினும் புதுவகையான இந் நோய்க்கட்டுப்படுத்தல் சம்பந்தமான விழிப்புணர்வு சகலருக்கும் அவசியமானது. முன்னெச்சரிக்கையுடன் இருந்தபோதிலும் நோய் அறிகுறிகளைக் கண்டால் வைத்தியரை அணுகி நோய் முற்றுவதைத் தடுத்துக்கொள்ள வேண்டும். நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்குப் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு அவசியமாகும்.

சிறுகதை

# மனப்பால்

சி. சுதந்திரராஜா

அடுத்த நாளின் தேர்த்திருவிழாவிற்காக அம்பலவாணி இப்போதே சிவப்பு வெள்ளைச் சேலைகளை மொட்டையான கட்டுத்தேரில் வளையக் கட்டிக்கொண்டிருந்தான். விடிகாலையிலிருந்தே மாலைச் சப்பறத்திருவிழாவை மற்றெல்லாத் திருவிழாக்களிலும் சிறப்பானதாகச் செய்துகாட்ட வேண்டும் என்கின்ற திமிரில் நாகலிங்கத்தார் ஆலாயப் பறந்தார். 'சரக் சரக்' கென்று செருப்புத் தேய வெளி வீதிக்கும் கடை கண்ணிகளுக்கும் தாவித் தாவித் திரிந்தார்.

மாசில்லாமணி சோடிக்கின்ற பூச்சரங்களையும் மணிமாலைகளையும் சிக்கெடுத்துக் கட்டிக்கொண்டிருந்தான். பரம்பரை பரம்பரையாக அவன்தான் கோயில் பண்டாரி. மரண வீட்டிலும், மணவீட்டிலும் பூமாலைக்குப் பொறுப்பு அவன்தான். நாகலிங்கத்தாரிடம் ஈடுவைத்த காணியிலே அவன் குடியிருப்பாளன். அதனுள் சின்னஞ்சிறு கொட்டில் போட்டு வயிரவருக்குச் சிவந்த பூவினால் அர்ச்சிப்பான். பிள்ளைகளோடு தேவாரமும் கணீரென்ற குரலில் பாடியதுண்டு.

"வெளிவீதிக்குக் கட்ட நொங்கு"

மாசில்லாமணி கேட்ட கணத்திலே நாகலிங்கத்தார் துணுக்குற்றார். பனை மரங்களிலே ஏற்றி நுங்குக் குலைகளைப் பறிப்பிக்க ஓராள் தேவைப்பட்டது. சாதித்திமிரில் மிதக்கின்ற அவருக்குப் பனையையும் ஏறியிறங்குதலையும் நினைத்தவுடன் பலத்த அருவருப்பு உடன் பிறந்தது. அந்தியேட்டிச் சோறு வேண்டிட முத்தன் முண்டியடித்தபடி வந்த போது பெரிய கலவரம் மூள நாகலிங்கத்தார் காரணமானார்.

"நாலாஞ் சடங்கில பெருத்த கொழுவல்"

நாகலிங்கத்தாரின் வேறு சாதனை பலராலும் விமர்சனம் செய்யப்படுவதாய் இருந்தது. அவரின் தொப்பியில் கோழிச் செண்டுகளாகவே இத்தனை சாதி வெறிச் சாதனைகளும் குவிமையம் கொண்டன.

முத்தனைத் தான் தேடிப் போனார். விறுமர் கோயில் கும்பிடு மட்டுமே முத்தன் அறிந்தது. நாகலிங்கத்தார் திருவிழாச் செய்யும் கோயிலின் வெளிவீதியில் கூட முத்தனையோ அவன் பிள்ளைகளையோ யாரும் கண்டிருக்கக் கூடமாட்டார்கள். அவனுக்கு அங்கே திருவிழா நடந்தாலும் ஒன்றே, நடக்காவிட்டாலும் ஒன்றே.

வீட்டில் குமர்கள் பூப்பெய்தியதும் கோழிக்குஞ்சு உரிக்கின்ற முத்தனுக்கு வளவு வாய்க்கால் வேலை எல்லாமே செய்வதில் பரிபூரண சுதந்திரம் கிடைக்கும். மாவிடிக்கும் வேலைக்கு முத்தன் வீட்டுப் பெட்டையும் இருந்தாள்.



கந்தசட்டிக்குத் தெற்பை போட்டு ஆடம்பரமாகக் கோயில் கிரியைகள் செய்வதில் நாகலிங்கத்தார் மகா வல்லவர். கொடியேற்றத் திருவிழாக்களில் உபயகாரர் அனைவரிலும் ஆடம்பரமாகச் செய்வதில் அவரை எளிதில் விழுத்திவிட முடியாது. பிரபல வங்கி ஒன்றில் நாகலிங்கத்தார் மகனுக்கு உத்தியோகம் எடுத்துக் கொடுத்திருக்கிறார். எட்டுக்கூட்ட நாதஸ்வர மேளக்கச்சேரியை அவன் ஏற்படுத்தியுமிருந்தான்.

கோயில் நற்காரியங்கள் தர்மவேலைகளில் தொண்டாற்றும் பெருத்த சீலர் என்கின்ற படிமமே ஊர்மக்களில் தொற்றியிருந்தது. கருடவாகனம், புதுக்கோபுர மணி போன்ற எல்லாவற்றிலும் நிதி திரட்டி முன்நின்று சளைக்காமல் உழைத்த மகான். வல்லூறுப்பார்வையினால் ஊரவர் நிதி நிலைப்பாடு அலசி மோப்பம் பிடிக்கிறவர்தான்.

"இண்டைக்கு உவர் நொங்குக் குலைகள் கட்டிறதையும் பாப்பம்"

பசுவனுக்குச் சொன்னான் முத்தன்.

"பனையேற ஒருத்தரும் இங்கில்லையே"

"பொயிலை வெட்டுக்குப் போயிட்டினம்"

"நீயேறேலாதே"

நக்கலடித்தார் நாகலிங்கத்தார். முத்தன் வீட்டுப் பெட்டை பெட்டிப்பாம்பாக அடங்கிப் போனாள்.

நாலரை மணிவரை பனையேறுவார் அகப்படாமல் அந்தரப்பட்டுக் கொண்டிருந்தார்.

"சோடினைக்கு நொங்குக்கு எங்கை போகிற"

வீட்டுக்காரியிடம் சொன்னார். வீட்டுக்காரி பலகாரம் போடுவதில் மும்முரமாயிருந்தாள்.

"அறுவான்களாலை"

"ஏனப்பா" வீட்டுக்காறி கேட்டாள்.

"நடப்படிக்கினம். பனையேறேலாதெண்டு,"

மறுபடியும் வெகுவாகக் கலங்கினார்.

மற்றுந் திருவிழாவுக்கு வெறும் சில்க் உடுக்கிற அவள் இன்றைய உபயத்துக்கு மணிப்புரி மடித்தபடி உடுக்க ஆரம்பித்தாள். மணிக்கணக்காகும் அவள் உடுத்து முடிந்து கோபுர வாசல் சேர்ந்திட. கடலை விற்கிற கிழவி வந்து அவளை வியப்போடுதான் பார்த்தாள்.

"வேறை எங்கையேனும் போய் நொங்கு கொண்டருவம்"

மாசில்லாமணி அவரை இக்கட்டுக்குள் நுழைத்தான்.

"அப்ப பிடி காரை"

திமிர் அடங்காமல் முன்சீற்றில் றைவருக்குப் பக்கத்தில் ஏறியமர்ந்தார்.

"போறதைப் பார்த்தாலே சப்பறம் போறமாதிரிக் கிடக்கு"

கொடுப்புக்குள் சிரித்தபடி பசுவனே சொன்னான். முத்தன் வெறிச்சோடிப் பார்த்த படியே காரின் புழுதிப்படலத்தைக் கிழித்தபடியே காறித் துப்பலானான். ▭



(நன்றி. மல்லிகை – மார்ச் – 2004)

## ஒத்த கருத்துள்ள ஆங்கிலப் பழமொழிகளும் தமிழ்ப்பழமொழிகளும்

**01. A man lives a generation; a name to the end of all generations**
ஒரு மனிதன் ஒருதலைமுறையே வாழ்கின்றான்; அவனது பெயரோ தலைமுறைகள் முடியும் வரை வாழ்கின்றன.

**02. If money is not the servant it will be thy master.**
பணத்தை ஏவலனாக வைத்திருக்காவிட்டால் அது உன் எஜமானனாகி விடும்.

**03.Contentment is more than a kingdom.**
போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.

**04. Make hay. while the sun shines.**
காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

**05. Every bird must hatch its own egg.**
அழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்.

**06. The low maker should not be a law breaker.**
வேலியே பயிரை மேய்ந்தது போலே.

**07. Beware of wolves in sheeps clothes.**
பசுத்தோல் போர்த்த புலிகள்.

**08. Many Kiss the hand they wish to cut off.**
வெட்ட விரும்பும் கரத்தையே முத்தமிடுவோர் பலர்.

**09. Money makes many things.**
பணம் பாதாளம் வரையும் பாயும்.

**10. Coming events cast their shadow - before**
கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே.

**11. A blind man sometimes hits the mark.**
குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்தது (குருட்டு இலக்கு)

**12. Fine Words dress ill deeds.**
சாதுரியமாக காரியம் ஆற்றுதல்.

**13. Man does what he can, and God what he will.**
மனிதன் முடிந்ததைச் செய்கின்றான். கடவுள் விரும்பியதைச் செய்கிறார்.

**14. Walnut and pears you plant for your heirs.**
சந்ததி பயன்பெற சாலவிருட்சம் நடுவோம்.

**15. Fame is not popularity.**
மக்கள் ஆதரவு புகழாகாது.

தொகுப்பு:
'எழில்'





# நூலகம் நாடித் தேடிப் பயில்வேன்

ச. சக்திபாலசர்மா
யா/ ஸ்கந்தவரோதயக்கல்லூரி, சுன்னாகம்.

எனக்குப் புத்தகங்கள் படிப்பது என்றால் மிக மிக விருப்பம். நான் வீட்டில் உள்ள போதும், விடுமுறை நாட்களிலும், பாட சாலையில் பாட ஆசிரியர் வராத வேளைகளிலும், பாடசாலை நூலகத்திற்கும் மற்றும் பொது நூலகத்திற்கும் சென்று புத்தகங்கள் படிப்பது வழக்கம். நான் வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் நூலகங் களில் அங்கத்தவராக இணைந் துள்ளேன். இதனால் அடிக்கடி நூல்களை இரவல் பெற்றுச் சென்று படிக்க முடிவதுடன் அங்குள்ள சிறுவர் பகுதியில் உள்ள சஞ்சிகைகள் பலவற்றையும் படிக்க முடிகின்றது. சுட்டிவிகடன், கோகுலம், அம்புலிமாமா, வேடிக்கை, பூங்கனி போன்றவை நான் விரும்பிப் படிக்கும் சிறுவர் சஞ்சிகைகளாகும். இவற்றுடன் ஆங்கிலப் பத்திகைகளில் வெளி வரும் சிறுவர் பகுதிகளான Funday Times, Junior Observer, Little Enquirer போன்றவற்றையும் படித்து எனது ஆங்கில அறிவையும் பொது அறிவையும் வளர்த்துக் கொள்வேன். 'விஜய்' பத்திரிகையின் அபிமான வாசகன் நான். தினக்குரல் பத்திரி கையின் இளந்தளிர் பகுதிக்கு அடிக்கடி விடயதானங்கள் செய்தி ருக்கின்றேன்.

சித்திரம் வரைவதில் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியதில் இவ்வாறான பத்திரிகைகள் நடாத்தும் சித்திரப் போட்டிகள் காரணமானவை எனலாம். குறுக் கெழுத்துப் போட்டியிலும் புதிர்ப் போட்டிகளிலும் பொது அறிவுப் போட்டிகளிலும் நான் அடிக்கடி பங்கு பற்றி பரிசில்களும் சான்றிதள்களும் பெற்றிருக்கிறேன்.

பத்திரிகைகளில் வரும் சுவையான அம்சங்களையும் முக்கியமான தகவல்களையும் வெட்டி ஒட்டி ஒட்டுப்புத்தகங்கள் பலவற்றை நான் சேகரித்து பாடசாலை சமூகக் கல்வி போட்டிகளில் கண்காட்சிப் படுத்தி பரிசில்கள் பெற்றுள்ளேன்.

வாசிப்பு பழக்கமே நான் புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சையிலும் பாடசாலை, பொதுப் பரீட்சைகளிலும் நன்னிலை எய்தும் வகையில் உதவியது என்பேன். மாணவர்களாகிய எமக்கு நூலகங்கள் இப்பரந்த உலகைக் காட்சிப்படுத்தும் ஜன்னல்கள் போன்றவை என்பது எனது கருத்தாகும். ▭



# இன்பமுற நல் விடிவு

இருபதாண்டுக் காலத்தின்
மேலாகத் தமிழர் நாம்.
பெருந்துன்பக் கடல் தனிலே
பரிதவித்துத் தவிர்க்கின்றோம்;
வருந்துயர் பலதாங்கினோம்;
விடியலைக் காத்திருந்தோம்;
பெருந்தியாக வேள்வியிலே
ஆகுதியாய் அவிசொரிந்தோம்.

செய்வினையில் அழுந்திச்
செயலிழந்து நிற்கின்றோம்;
உய்வதெப் போதென்று
உருக்குலைந்து திரிகின்றோம்;
தெய்வந்தான் துணையென்று.
துல்லியமாய்த் தெரிந்திருந்தும்.
பொய் புரட்டு பொறாமையிவை
போகவில்லை எமைவிட்டு.

ஆலயங்கள் தாமவற்றில்
அபிஷேகம் அன்னதானம்
மேலாகச் செலவழித்துச்
செய்கின்றோம்; சுயநலந்தான்.
மேலோங்கி நிற்கிறது;
மதங் கூறும் அன்புவழி
சீலங்கள் சீரில்லை;
சிந்தித்துத் திருந்தவேண்டும்.

என்றென்று வரும்அமைதி
ஏங்கித்தான் ஏது பயன்
அன்னவர்கள் மனங்களிலே
நல்லவற்றை விதைத்திடுவாய்
என்று நாம் எல்லோரும்
இறைவனையே வேண்டிநிற்போம்
இன்பமுற நல்விடிவு
எதிர்காலம் வருமுறுதி.

**கே. தவராசா**




## துர்க்கா பொத்தகச்சோலை

- தரமான பாடசாலை உபகரணங்கள்
- வண்ணமிகு வாழ்த்து மடல்கள்
- கலண்டர்கள், டயறிகள்
- காகிதாதிகள்
- இலங்கை இந்திய சஞ்சிகைகள், புதினத்தாள்கள்

என்பவற்றைக் குறைந்த விலையில் வழங்குவதால் புகழ்பெற்றுவிட்ட ஸ்தாபனம்.

**துர்க்கா பொத்தகச்சோலை**

தரமான றபர் ஸ்ராம் (Rubber Stamp) செய்பவர்கள்

*DXN* ரிசி காளான் உப உணவுகளை விற்பனை செய்ய அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்

# THURKA BOOK SHOP

BUS STAND - CHUNNAKAM
☎ 021-2226267

## நீதினி முகவர் தபாலகம்

பஸ் நிலையம் முன்பாக சுன்னாகம்

தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புகள் (SWORN TRANSLATION) தட்டச்சு சேவைகள், முத்திரைகள், காசுக்கட்டளைகள், (MONEY ORDERS) வான் கடிதம் (AEROGRAMS) முதலான சேவைகளை மேலதிக கட்டணமின்றி பெறலாம்.

**WESTERN UNION MONEY TRANSFER**

வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினர் எமக்குப் பணம் அனுப்பினால் 20 நிமிடத்தில் உங்களிடம் பணம் கையளிக்கப்படும்

@CHUNNAKAM
NIETHINI APO
TEL: 94-21-2226267

## NIETHINI AGENCY POST OFFICE

BUS STAND CHUNNAKAM.

# வாசகர்கள் விழிப்படைவது வாழ்வினை வளமாக்கும்

குப.பா. விஜயகுமார்.

"நீங்கள் சிறுபராயம் முதல் எதை எதையோ எல்லாம் அறிகின்றீர்கள். வாய் மூலமாக, ஏட்டில் எழுதியவாறாக, தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாக, அவரவர்க்குரிய வரம்பினுள்ளேயே பார்க்கின்றோம். இவ்வாறான பல தரமான படைப்புக்கள், அறிவுசார் கருத்துக்கள் நிலைபெற இருத்தி வைக்கப் பெற்று சந்ததி சந்ததியாக நல்வழிப்படுத்தவும், வளமான வாழ்வை உருவாக்கவும், என்ற பெருநோக்கிலேயே இவை ஆவணங்களாக உருமாற்றம் அடைந்தன.

ஒரு நாட்டில் உயர்ந்த கட்டிடம் ஒன்று நகரத்தின் மத்தியில் மதிப்பாக நின்று கம்பீரமாகக் காட்சி தருவதனை யாபேரும் மகிழ்வாகப் பார்த்து பெருமை கொள்கின்றோம் என்றால் அக்கட்டிடத்தினை வடிவமைத்த கட்டிடக் கலைஞனின் கல்வி அறிவு, கலை இரசனை, வாழ்வு நெறி எவ்வாறு இருந்திருக்கும் என்று சற்றே எண்ணிப் பாருங்கள் . இவ்வாறாக ஒரு மனிதன் தனது கல்வியில், பண்பில், பழகும் இயல்பில் நல்லவனாகவும், சமூக மதிப்பு, அந்தஸ்து இவற்றில் தனித்துவமாக மிளிர்கின்றான் என்றால், அவ்வாறான உயர்வு அவனது கல்வி அறிவையே பறைசாற்றும். இதனை நோக்குமிடத்து அவனது கல்வி உயர்ச்சிக்கு காரணர்களாக மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வகையில் அமைவதை நோக்கலாம்.

உலகின் பரந்துபட்ட பெருமளவிலான அறிவுகளை, அனுபவங்களை, தகவல்கள் வடிவிலான ஆவணங்களைப் பத்துப் பெரும் பிரிவுகளாக்கி, ஒழுங்காகப் பேணிவருபவை நூலகங்கள் ஆகும். இவை இப்பொழுது 'தகவல் மையங்கள்' என அழைக்கப்படுகின்றன.

இவ்வரிசையில், யாழ்ப்பாணம் வலிகாமம் தெற்குப்பிரிவில் யாழ் - காங்கேசன்துறைச் சாலையில் மருதனார்மடம் சந்தியில் மேற்குத் திசையில் மானிப்பாய் வீதியில் இடக்கையில் மரக்கறிச் சந்தையைக் கிழக்குப்புற எல்லையாகக் கொண்ட பிரதேச சபைக்குச் சொந்தமான வளவில் வடக்குப் பார்த்து உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றேன். நான் யார்?

ஆம். நான் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் நிர்வாக எல்லை மக்களுக்கான பொது நூலகம் ஆவேன். அருகே யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, விவசாயக்கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி போன்ற அறிவு வளர் சோலைகளையும் கொண்டுள்ளேன். இந்த நிறுவனங்களின் மாணவர்களுக்கு அறிவைப் பெருக்கவல்ல நூல்களைக் கொண்டுள்ளேன்.

இவை தவிர, சமய ஞானம், தமிழ்மொழிப்புலமை மிக்க பெரியார்களுக்கான நூல்கள் பலவற்றையும் ஒருங்கே கொண்டுள்ளேன். பாடசாலை செல்லும் சிறார்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை பாடப்புத்தகங்கள், பயிற்சிகள், வினாவிடைகள் போன்றனவற்றையும் உசாத்துணைசார்



நூல்களையும் எனது களஞ்சியமாகக் கொண்டுள்ளேன். பல்வேறு தலைப்பிலான உள்ளூர், வெளியூர் சஞ்சிகைகளும் உங்கள் இரசனைக்காக என்னிடம் இருக்கின்றன.

பல்வேறு தலைப்புக்களில் பத்திரிகைத் தொகுப்புக்கள்,
பாலர் நீதிக் கதைகள் போன்ற சிறுவர் விரும்பும் நூல்கள்,
பாடப்பரப்புகளுக்கு உதவும் பயிற்சிகள், வினா விடைகள்,
ஆய்வு நூல்கள், ஆராய்ச்சித் தகவல் திரட்டுக்கள்,
தத்துவ நூல்கள், சமய நூல்கள், சமூகவியல் நூல்கள்,
விஞ்ஞானமும் தொழிநுட்பங்களும் சார்ந்த நூல்கள்,
கவின்கலைகள் நடன சங்கீத ஓவிய நூல்கள்,
ஆக்க இலக்கியங்கள் , புவியியல் நூல்கள்
நாடுகளினதும் தனிநபர்களினதும் வரலாறுகள், சரித்திரங்கள்.

இவ்வாறான பலதுறை சார் நூலகத்தை பல்கலைக்கழகம் என்றே கூறுவார்கள். கல்விகற்கும் பல்கலைக்கழகத்துக்குள் செல்ல வாய்ப்பில்லாதவர்களின் பல்கலைக்கழகமாக நூலகத்தைக் குறிப்பிடுவார்கள்.

எதுவித செலவுமின்றி ஒரு வாசகர் எனது செல்வமான நூல்களைப் படிக்கலாம். இதற்கு வலி. தெற்கு பிரதேச சபை ஆவன செய்து உதவி வருகிறார்கள். விருந்தாக அமையக்கூடிய நூல்களின் சுவையைச் சுவைத்திட நீங்களும் ஒருதரம் வரவேண்டும் என அன்புடன் அழைக்கின்றேன்.

நாம் கல்வியறிவு இல்லாதவர்களைப் பார்த்து ஒரு நாளாகிலும் மழை நேரத்திலாவது பாடசாலை தாழ்வாரத்தில் ஆகிலும் நிற்கவில்லையா என்கின்றோம். ஆனால் இப்பகுதியில் பிறந்து வளர்ந்த பலர் என் இருப்பிடத்தைக் கூட இன்னும் அறியாதவராக இருக்கிறார்கள்.
பிறகு எப்படி நூலின் நயங்களை சுவைத்து மகிழ்ந்திருக்கப் போகின்றார்கள். இவ்வாறு உங்களை யாரும் கேட்டால் துன்பம் அல்லவா."

என்ன திகைத்து விட்டீர்களா?.


நான் உடுவில் பொது நூலகத்தின் ஒரு வாசகன். ஒரு நாள் இந்நூலகம் என்னுடன் சொல்லிக் கொண்ட கதையை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன்.



# குறும்பாய் குறும்பா

- ஏழாலை க. அபராசுதன்.

அரிசிமாவில் பிட்டவித்து தின்றோம்
இன்றதற்கு தட்டுப்பா டென்றோம்
கார்இருளால் சூழ்ந்திருந்த
பேக்கரி முன் சண்டையிட்டு
சரியாக நாலரைக்கே நின்றோம்.




மண்ணெண்ணெய் செற்அதனின் முன்னே
நிற்கின்றார் வெற்றி வேலு அண்ணே
கண்ணெல்லாம் நீர் மல்க
நீண்ட நேரம் நிற்க வைத்து
கண்ணியமாய்க் கொடுக்குமிடம் சுன்னை.

யாழ்ப்பாணம் தலைகீழாய்ப் போச்சு!
இன்னுமொரு வியட்னாமாய் ஆச்சு!
பாழ்பட்டுப் போனதொரு
பஞ்சம்வந் தெங்களையும்
கூழ்குடிக்க வைக்கிறதே காச்சி!





நெடும்பாதை பூட்டியத னாலே,
உயிரோட்டம் நின்றதனைப் போலே,
கடும்சோகம் வாட்டுதெம்மை
பாதைக்காய் அங்குசென்று
இடும் ஆணை; திறக்கத்திரு மாலே!

கோதுமைமா தீட்டலுடன் சீனி,
வேண்டிடலாம் என்றெண்ணி வேணி,
சாது போல சத்தமின்றி
சாங்கத்தில் நின்றுபார்த்து,
போதுமெனச் சென்றாள் தலை கூனி;







அடுத்த வாரம் போகுமென்றார் கப்பல்;
அதை நம்பிப் போய் நின்றான் அப்பன்,
அடுத்தடுத்து நடைபெற்ற
கடற் சண்டை காரணத்தால்
கடுப்பாகிப் போனானச் சுப்பன்



படிப்பாலே உயர்ந்ததெங்கள் தேசம்
இப்பொழுதோ அந்த நிலை மோசம்
அடியோடு அழிந்திடுமோ?
எழுந்திடுமோ என்பதுவே?
இடிபோன்று மனத்திலெழும் கோசம்.



உரமின்றி விவசாயி வாட!
வந்தவுரம் விலையதிகம் கூட!
தரமான பூமியிதில்
தீயகுண்டு வீழ்வதனால்
மரம் கூட உரத்தினையே நாட!



பஞ்சியது பஞ்சியெனத் தானே
பேசாமல் நானிருப்பேன் வீணே
எஞ்சியது குழாய்க்கிணறும்
கக்கூசும் என்றெண்ணி
எஞ்சியோவை நாடிநிற்பேன் நானே.



இன்னார்க்கும் இன்னார்க்கும் காதல்
அந்நேரம் இந்நாட்டில் மோதல்
மன்னாரில் அவளிருக்க;
அவள்நினைவில் இவனிருக்க
அன்னாரின் மனதினிணலோ நோதல். □

வெள்ளிமலை சஞ்சிகைக்கு பல்துறை ஆக்கங்களை
பிரதேச எழுத்தாளர்களிடம் இருந்து எதிர் பார்க்கின்றோம்.
இச்சஞ்சிகையில் வெளிவந்துள்ள படைப்புகளுக்கு அவற்றை
ஆக்கியோர்களே பொறுப்பாளிகளாவார்.
- சஞ்சிகை ஆசிரியர்கள்

சிறுகதை

# புலர் காலையின் வலி

குயில்களின் கூக்குரல்கள்; சேவல்களின் கூவல்கள்; குருவிகளின் கீச்சொலிகள்; கிளிகள், மைனாக்கள், இன்னும் ஏதேதோ பறவைகளின் குரலொலிகள். இந்த பூபாள இராகத்துக்குக் காது கொடுக்கும் சுகானுபவம்... அப்பப்பா! இந்த கூட்டிசையை ஒருநாளேனும் பதிவு செய்து வைக்க வேண்டும்.

இந்த இசைக்காக எனது மனதையும் காதுகளையும் திறந்து வைத்தேன். ஒவ்வொன்றின் இசையும் ஒன்று சேர்ந்து புதியதொரு இசையாக இழைந்து வருகிறது. இது என்ன புதிய ஒலி... ஓ... செண்பகத்தின் சத்தம். உரு...உரு... என மத்தளம் இசைப்பது போல. ஏனைய ஒலிகளுக்குத் தாளம் போடுவது போல,

செண்பகத்தைப் பார்த்து எவ்வளவு நாளாகிவிட்டது! அதன் ஒலியைக் கூட அண்மையில் கேட்டதாக ஞாபகம் இல்லை. யுத்தத்தின் சத்தத்துக்கு முன்னால் தாம் எம்மாத்திரம் என்றெண்ணி எங்கேனும் சென்று விட்டனவா?

முன்பெல்லாம் எங்கள் வீட்டில் பனையோலையைக் குத்திச்சாத்தி அமைத்த வேலியின் ஓலை இடுக்குகளுக்குள் நுழைந்து புழுக்களைத்தேடிக் கொண்டிருக்கும் இந்தச் செண்பகங்கள். ஓலைக்கு ஓலை தாவி புழுக்களையும் பூச்சிகளையும் கொத்திக் கொண்டு நிலத்துக்கு வந்து அவற்றை உண்ணும். மீண்டும் வேலி இடுக்குகளுக்குள் நுளையும். கறுத்த உடலும் மண்ணிறச்சிறகும் சிவந்த கண்களுமாக தத்தித் தத்தித் திரியும் செண்பகம். ஒரு உற்சாகத்தையோ, மகிழ்ச்சியையோ வெளிக்காட்டாச் சுபாவம் அதற்கு. அடிக்கடி உடலைச் சிலிர்த்துக்கொள்ளும் அதன் அழகு ரசிக்கக்கூடியதல்ல. தாவிப் பறப்பதோ, நடப்பதோ கூட அழகானதல்ல. அடிக்கடி டீசல் இயந்திரம் போல "ர்க்ஸ்....." என ஒலியெழுப்பிக் கொண்டிருக்கும்.

எங்கள் வீட்டில் பெரியதொரு முருங்கை மரமிருந்தது. வசந்த காலத்தில் முருங்கையிலும் பூக்களும், காய்களும் தொங்கும். அழகான வண்ணத்துப் பூச்சிகளெல்லாம் சுழன்றுவரும். அப்போதுதான் முருங்கை மரத்தில் மயிர்க் கொட்டிகள் தலை காட்டும். இரவெல்லாம் இலைகளை அரித்துத் தின்று விட்டு, சூரிய ஒளியைக் கண்டதும் தப்பியோடிவந்து அடி மரத்தில் குவிந்து கொள்ளும். பார்க்க சாம்பல் நிறத் தேன் கூடு போல் இருக்கும்.

மயிர்க்கொட்டிகள் என்றாலே அம்மாவுக்கு ஆகாது. உலகத்திலே மிகக் கூடாதவற்றுள் ஒன்றாகவே அவா மயிர்க்கொட்டிகளைக் கருதினார். தனது தாயாரின் கண்பார்வை போனதற்கு மயிர்க்கொட்டியின் மயிர்



கருவிழிக்குள் குத்தியதுதான் காரணம் என்று அடிக்கடி சொல்வார். மயிர்க் கொட்டிகள் குவிந்திருக்கும் இடத்தில் மண்ணெண்ணையை ஊற்றி ஓலைகளில் தீ மூட்டி எரித்து விடுவார். நெளிந்து தப்பியோடும் புழுக்களையெல்லாம் விட்டுவைக்கமாட்டார். தேடித் தேடி தடியொன்றினால் தட்டி எரி நெருப்பில் இடுவார். அம்மா பொரித்துத் தரும் இறாலைப் பார்க்கும் போதெல்லாம் எரிந்து சுருண்டிருக்கும் மயிர்க் கொட்டிகள் தான் ஞாபகத்திற்கு வரும். அதனால் நீண்ட காலமாக நான் இறால் சாப்பிடுவதில்லை.

அப்போதெல்லாம் இந்த செண்பகங்களும் முருங்கை மரத்தடியில் அதிகமாகக் காணப்படும். அம்மாவின் வேலையை இலகுவாக்குவது போல அவை மயிர்க்கொட்டிகளைப் பிடித்துத் தின்று விடும். மயிர்க் கொட்டி உடலில் பட்டால் உண்டாகும் சுனைப்பை நானறிவேன். எத்தனை யோ நாட்கள் இப்படிப்பட்டு அவஸ்தைப் பட்டிருக்கிறேன். வெங்காயமோ, சுடுசாம்பலோ தேய்த்தும் கூட அதன் நமைச்சல் தீராது. அடிக்காலில் பட்டால் போதும். எங்கு தேய்த்தும் குணப்படாது. கத்தியை நெருப்பில் சூடு காட்டி அதனை சொறியும் இடத்தில் வைத்து எடுத்தால்தான் குணமாகும். இந்த செண்பகங்களுக்குச் சொறிவு உண்டாவதில்லையா? இப்படி அலாதியாய்ச் சுவைத்து உண்கிறதே!

செண்பகங்களைக் கண்டால் அம்மா கடவுளைக் கண்டது போலப் பார்ப்பார். "வா...வா... இந்த சனியன்களைப் பிடித்து தின்றுவிடு" என்று தன்பாட்டில் சொல்லிக் கொள்வார். அக்காலத்தில் ஒரு சினிமாப் பாடலும் வந்தது. செண்பகத்தைக் காணும் போதெல்லாம் அதை உரத்துப் பாடுவேன். "செண்பகமே .... செண்பகமே.... தென்பொதிகை சந்தனமே...." என்று அப்பாடல். ஒரு முறை கிணற்றுக்கட்டிலிருந்து இப் பாடலைப் பாடிக் கொண்டிருந்த போது செல்வி வந்தாள்.

"நல்லாய்ப் பாடுறியே..... நீ ஏன் சங்கீதம் படிக்கக் கூடாது?"

எனக்கு பாடவராது. கொஞ்சம் குரலை உயர்த்தினால் கோழி போலக் கேரத்தொடங்கி விடும். ஆட்களுக்குமுன்னால் பாடும் வெட்கத்தில் தான் வெள்ளிக்கிழமை பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதில்லை. செண்பகத்தைப் பார்த்த புழுகத்தில் பாடி இப்படி வம்பாகி விட்டது.

"என்னடா ராசு... சித்திரத்தை விட்டுவிட்டுச் சங்கீதத்துக்கு மாறனடா... நான் உனக்கு சொல்லித்தாறன்..."

'சேச்சே... எனக்குப் பாடவராது செல்வி.... சும்மா செண்பகத்தைப் பார்த்துப் பாடினேன்.... அவ்வளவுதான்!"

"பொய்... உன்னைப் போலே நானே பாடமாட்டன். மற்றது உந்தப் பாட்டு செண்பகப் பூவைப்பற்றியது பறவையைப் பற்றியல்ல."

'செண்பகப்பூ ... அப்படியொரு பூ இருக்குதோ?"

ஓ... வடிவான பூவாம். இல்லையெண்டால், உந்த வடிவில்லாத பறவையை ஆரும்

பாடுவானோ? அடைக் கோழி மாதிரி உடம்பைச் சிலிர்த்துக்கொண்டு... சே..." அவள் வாயைச் சுழித்துச் சொன்ன போது உண்மை என்றுதான் தோன்றியது.

அது அழகான பறவை இல்லைத்தான். செல்வி கூட அப்படித்தான்! கறுப்பாக, எண்ணெய் வழியும் தலையுடன், கோழி முட்டைக்கண்களும், மண்வெட்டிப் பற்களுமாக, கறுப்பை மறைக்க அடிக்கடி மஞ்சளில் குளித்திருப்பாள். முன்நோக்கிய பற்களை மறைக்க வலிந்து சொண்டை மூடுவதுதான் ஆக அசிங்கம். ஆனாலும், செண்பகம் போலவே செல்வியையும் எனக்குப் பிடித்திருந்தது. இப்போது செல்வியும் இல்லை. இருக்கிறாளோ தெரியவில்லை. இந்த பதினைந்து வருடத்தில் சொந்த கிராமத்தை விட்டு வெளியேறி வண்டுருட்டிய மல உருண்டைகள் போல ஊரூராக அலைக்கழித்து சிதறி அழிந்துதான் போனோம். என்னைப் போலவே செல்வியும் ஏழெட்டு இடமாக அலைந்து எங்காவது ஒரு ஊரின் மூலையில் இடம் பெயர்ந்து வாழக்கூடும். இல்லையேல் புலம் பெயர்ந்து வெளிநாடொன்றில் இருக்கலாம். சில வேளை யுத்தத்தில் காணாமற் போன, இறந்துபோன இலட்சக்கணக்கானோரில் அவளும் அடங்கியிருக்கலாம்....போராளியாகக்கூட மாறியிருக்கலாம். செல்வி தொடர்ந்து அரியண்டப்படுத்தி ஒருவாறாக என்னை சங்கீதத்துக்கு மாற்றி விட்டாள். மெல்ல மெல்ல இசையில் ஒரு பிரேமையை என்னுள் ஏற்றியவளும் அவளே. குயில் கூவும் போது எதிர்க்குரல் கொடுத்துப் பாடுவதில் அவளுக்கு அலாதிப் பிரியம். நான் கூட பலமுறை அவ்வாறு குயிலோடும் சேர்நது கூவியிருக்கிறேன். பாடசாலையில் மற்ற மாணவருடன் நான் சண்டையிடும் போதெல்லாம், அவளே என்னைச் சாந்தப்படுத்தி விலக்கிவிடுவாள். "கோபப்படாதேடா... கோபப்பட்டால் நரம்பு வியாதி வருமாம். வயித்துப் புண் கூட வருமாம்" என்பாள். ஒவ்வொரு ஆணியைக் கோபம் வரும் போதும் மரத்தில் அறையுமாறும், கோபத்தை அடக்கும் போது அவற்றைக் கழற்றுமாறும் அவள் ஆலோசனை கூறினாள். சில நாட்கள் நான் அவ்வாறும் செய்துமிருக்கிறேன். இப்படியாக, என்னிடம் இருந்த கோப உணர்ச்சியை மெல்ல மெல்லக் கொன்றொழித்து விட்டாள். மயிர்க் கொட்டியை ஒழிக்கும் செண்பகம் போல.

ஒரு நாள் நானும் செல்வியும் பாடசாலை விட்டு வரும் போது செண்பகம் ஒன்று பாதையில் நசியுண்டு இறந்து கிடந்தது. பாதையைக் கடக்கும் போது அவதானமில்லாது விடில் இப்படித்தான் இறக்க நேரிடும் என்று செல்வி சொன்னாள். தத்தித் தத்தி ஓடும் செண்பகம் லொறியின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் நசிந்து போயிருக்க வேண்டும். இந்த எரு ஏற்றும் லொறிகளுக்கு அவசரந்தான்! குஞ்சரப்பாவைக்கூட ஒரு முறை முட்டி மோதப்பார்த்தது. நல்ல வேளை, கடுகுநாவற் பற்றைக்குள் வீழ்ந்து சிராய்ப்புக் காயங்களுடன் தப்பி விட்டார்.



குஞ்சரப்புவுக்கும் செண்பகத்தில் பற்றுண்டு, கூடவே காகங்கள்,கொக்குகள், மைனாக்களிலும் பயிர்களுக்கு எருவோ, குப்பையோ இடும்போது இவை கூட்டம் கூட்டமாக வரும் புழுக்களையும் கறையான்களையும் தின்று தீர்க்கும். இவை வருவது பயிருக்கு நல்லதென்பார் குஞ்சரப்பா.

"இதுகள் எங்கடை சினேகிதர் மாதிரி, சினேகிதர் என்றால் ஒருத்தருக் கொருத்தர் உதவ வேணும். அப்படித்தான் கமக்காரரும் இதுகளும்". என்றும் சொல்வார். குஞ்சரப்பா உரமோ, மருந்துகளோ பாவித்துப் பயிர் வளர்த்ததில்லை. உள்ளிச்சாறும், வேப்பிலைச் சாறும்தான் அவரது மருந்துகள். புற்களைப் புடுங்கி அழித்து விட்டால் பயிருக்கு ஆபத்தில்லை என்பது அவரது வாதம்.

எங்களூரில் ஆழக் கிணறுகள், சூத்திரத்தில் வளைய வரும் மாடுகள் மூலமே நீர் பாய்ச்சப்படும். குஞ்சரப்பாவின் தோட்டத்திலும் சூத்திரம் இருந்தது. மாடுகளைப்பூட்டி, இரண்டு மூன்று முறை வளைய வருவார். பிறகு சால்வைத்துண்டை ஆசனத்தில் போட்டு விட்டு நீர் பாய்ச்சத் தொடங்கி விடுவார்.

மாடுகள் வளைய வந்து கொண்டேயிருக்கும். அப்போதும் தோட்டத்தில் நிறையக் கொக்குகளையும், செண்பகங் களையும் காணலாம். புழுக்களை உண்டு களைத்த கொக்குகள் வளையவரும் மாடுகளின் மீதமர்ந்து காற்று வாங்கிக் கொண்டிருக்கும்.

உரப்பாவனை வந்த போது குஞ்சரப்பா அதை எதிர்த்தார். "தண்ணீர் நஞ்சாகப் போகுது. மரக்கறிகளைத்திண்டு மக்கள் வயிறுவெடித்துச் சாகப் போகிறார்கள்" என்றெல்லாம் அவர் கத்தினார். எங்களூரில் செல்லக்குட்டிதான் முதலில் உரத்தைப் பாவித்தார். மரவள்ளிக்கிழங்குகள் உரத்தில் திளைத்துத் தொடையளவு இருந்தன. மற்ற மரக்கறிகளும் அப்படித்தான். அதற்காக அவருக்கு "விவசாய மன்னன்" பட்டமும் கிடைத்தது.

செல்லக்குட்டி குஞ்சரப்பாவை "பழைய பஞ்சாங்கம்" என்றே அழைத்தார். பலரும் அவரைப் போலவே ஏசினர். "விசர்க் கிழவன்... கட்டையிலை போற வயதிலை திட்டிக் கொண்டு திரியுது" என்றுதான் செல்லக்குட்டி தனது எரிச்சலை வெளிப்படுத்தினார்.

அதன் பிறகு, மெல்ல மெல்ல உரமும் மருந்துகளும் அனேகமான தோட்டங்களுக்கு வந்து விட்டன. செண்பகங்களும் மைனாக்களும், காகங்களும் வீழ்ந்து இறப்பது அதிகரித்தது.

அதிலும் முந்திரிகைத் தோட்டங்கள் வந்த பின்னர் இத்தொகை மேலும் கூடியது. "துலைவான்கள்...நன்றி கெட்டவங்கள்..." இந்தப் பச்சைப் பறவையளைக் கொல்லுறாங்கள்.... உவங்கள் நல்லாய் இருக்க மாட்டாங்க..." குஞ்சரப்பா ஆத்திரம் மிகுந்து பலதடவை கத்தியிருக்கிறார்.

கொஞ்ச காலத்தில் எங்கள் பகுதியில் யுத்தமும் தொடங்கியது.

அடிக்கடி குண்டுகளும் ஷெல்களும் வெடித்தன. துப்பாக்கிகளும் முழங்கின. இராணுவத்தினரும் போராளிகளும் திடீர் திடீர் என மோதிக் கொண்டனர். சத்தம் கேட்டு ஓடுவதும், அது அடங்கியதும் மீண்டும் வருவதுமாக பொழுதும் கழிந்தது.

"சீ... சீரழிஞ்ச வாழ்க்கை" குஞ்சரப்பா சலித்துப் பேசினார். திடீரென்று ஒருநாள் அட்டாளைப் பலகையில் சாய்ந்து தூங்கியவர் அப்படியே இறந்து போனார். ஒரு மாரித் தவளையின் மரணமாகவே செல்லக்குட்டியும் வேறு பலரும் இதனைக் கருதினர். அவரது உடலை எரித்து விட்டு வந்த மறுநாளே நாங்கள் எங்கள் கிராமத்தை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

அன்று, அதிகாலையிலேயே ஷெல்கள் வீழ்ந்து வெடித்துக் கிலி கொள்ளச் செய்தன. படுக்கையில் இருந்து துடித்தெழுந்து ஊர் முழுவதுமாய் கலவரப் பட்டு ஓடினோம். அம்மன் கோயிலடியில் போய் நின்றோம். செல்வி கூட அங்கு நின்றிருந்தாள். கலவரத்தோடு மிரளும் விழிகளை உருட்டியபடி இருந்தாள். கடைசித் தங்கையை இடுப்பில் தூக்கி வைத்தபடி அவள் அங்குமிங்கும் திரிந்தாள். எனக்கோ தூக்கக் கலக்கம். ஆலமர வேரில் சாய்ந்தபடி உறங்கிவிட்டேன்.

விடியும் வேளை மீண்டும் வெடித்த சண்டையுடன் விழித்துக் கொண்டேன். கிராமத்தை விட்டு வெளியேறுமாறு இராணுவத்தினர் வானொலியில் அறிவிப்பதாகச் சொன்னார்கள். ஹெலிகொப்டரில் இருந்து வெளியேறக் கோரும் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. தருமு அதைப் பொறுக்கி வந்து ஆலாபனை பண்ணினான்.

சண்டை ஓய்ந்திருந்த வேளை வீட்டிற்கு வந்து அகப்பட்ட பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தோம். அப்போது மீண்டும் ஷெல்கள் வெடித்தன. எடுத்த பொருட்களுடன் மீளும் போது சடாரென வெடித்த ஷெல் செவிப்பறையில் மோதி ங்....ங்... என அறைந்து கொண்டிருந்தது. முத்தர் வீட்டு பனை வளவில் அதன் புகையும் மணமும். அந்த அகால வேளையிலும் குயில் ஒன்று ஒற்றைக் குரலில் கத்திக் கொண்டிருந்தது.

ஒருவாறாகத் தப்பியோடி வந்து, ஒவ்வொரு இடமாக அலைந்து. ஒவ்வொரு சண்டைகளுக்குள்ளும் அகப்பட்டு... இந்தப் பத்தாவது வீட்டில் வாழவேண்டியதாயிற்று.

அந்த நாளிலிருந்து செல்வியைக் காணவில்லை. செண்பகங்களைக் கூட பார்த்த ஞாபகம் இல்லை. வேறு பலவற்றைக் கூட மீண்டும் பார்க்கக் கிடைக்க வில்லை. வார இறுதி நாட்களில் நாங்கள் ஓட்டும் சூத்திரம்.... கண்ணப்பரின் லாவகமான கயிறு முப்பில் மூசியோடும் செங்காரிக் காளைகளும், அதன் பின்னால் ஓடும் ஒற்றைத் திருக்கல் வண்டியும்.... உடையார் வீட்டு மூலையில் சிறிய மண்ணிறமான தண்ணிக் குட்டிப் பழங்களைக் குலை குலையாகத் தரும் மரம்... இன்னும் இன்னும். கூடவே நினைவில் மட்டும் நிற்கும் மனிதர்கள்.



எங்களூருக்குப் போகவே முடியவில்லை. உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருக்கும் அதற்குள், இனிமேல் போகலாம் என்ற நம்பிக்கையும் பொய்த்து விட்டது. எங்கள் வீடுகளை உருத் தெரியாதவாறு பற்றைகள் மூடியிருப்பதாகச் சொல்கிறார்கள். குஞ்சரப்பாவின் துருப்பிடித்த சூத்திரத்தில் கூட கொவ்வைக் கொடிகள் படர்ந்திருக்கக் கூடும். செல்வியைப் போல பார்வையிலிருந்து மறைந்த பலருள்ளும் எங்காவது ஒரு மூலையில் உயிருடன் இருக்கும் ஒவ்வொருவரும் என்னைப்போல இப்படி இருந்து தனது கிராமத்தை நினைக்கக் கூடுமோ?

'எங்கள் கிராமமோ ? அது என்றோ இல்லாமல் போய்விட்டது. கோழியிலிருந்து பிடுங்கி எறியப்பட்ட இறகு போல நாங்கள் அதிலிருந்து விலகி விட்டோம். அதை மறக்க வேண்டியதுதான். முடியாவிடினும் அதுதான் நியதி. யாராவது அருள் கூறும் வரை அதுதான் நிலைமை. அதை விடுவோம்.

சோம்பலை முறித்து பாயில் எழுந்து உர்க்கார்ந்த போது தலை கனத்தது. தூரத்தே செண்பகத்தின் மத்தளவோசை தேய்ந்து ஒலிக்கிறது. 'இந்த செண்பகங்கள் எனது ஊரின் பனை மரங்களுக்கு கீழே விழுந்து குவிந்திருக்கும் ஓலைகளைக் கிளறி, புளுக்களைப்' பொறுக்கிக் கொண்டிருக்கக் கூடுமோ ?

**நன்றி**

பூபாள ராகங்கள் - 2006 விழாக்குழுவும், தினக்குரல் பத்திரிகையும் இணைந்து உலகளாவிய ரீதியில் நடத்திய மூன்றாவது சிறுகதைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற சிறுகதை. இச்சிறுகதை வெளிவந்த 2006 ஆகஸ்ட் 13 ஞாயிறு தினக்குரல் பத்திரிகைகள் வடபகுதி நிலைமைகள் காரணமாக இப்பகுதியில் கிடைக்கப்பெறவில்லை. இப்பிரதேச எழுத்தாளரின் பரிசுபெற்ற ஆக்கம் என்பதால் நன்றியுடன் வெளியிட்டுள்ளோம்.

- ஆசிரியர்கள்.



இன்று நாம் காணும் வலிகாமத்தை எத்தனையோ இன்னல்களுக்கும், இடர்களுக்கும், அவதூறுகள், ஏச்சுக்கள், விமர்சனங்களுக்கு மத்தியிலும் செயலூக்கம் குன்றாத சிந்தனையோடு கட்டியெழுப்பப் பாடுபட்ட அனைவருக்கும்,


நாளை நாம் காணவிரும்பும் வலிகாமத்தை எத்தனையோ இன்னல்களுக்கும், இடர்களுக்கும், அவதூறுகள், ஏச்சுக்கள், விமர்சனங்களுக்கு மத்தியிலும் செயலூக்கம் குன்றாத சிந்தனையோடு கட்டியெழுப்பப் பாடுபடப் போகும் அனைவருக்கும், வெள்ளிமலையின் வணக்கங்கள்.

# அம்பாள் மருந்துக்கடை


**சகல விதமான ஆயுர்வேத வகைகள்**

**ஆலய அபிஷேக திரவியங்கள்**

போன்றவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்



**அம்பாள் மருந்துக்கடை**



*சந்தை உட்புறம்,*
*சுன்னாகம்.*




# மனித குலத்திற்கு நன்மை அளிக்கும் மனோவசியக் கலை

**உடுவில் சக்தி தியாகராசா**

மனோவசிய கலை என்னும் அற்புதக் கலையானது முற்காலத்திலிருந்து மகான்களாலும் தவசிரேஸ்டர்களாலும் வளர்க்கப்பட்டது. இக்கலையின் சக்தியால் பல அற்புதங்களைச் செய்தார்கள். கண்களால் பார்ப்பதாலும், வாயினால் ஊதுவதினாலும், கைகளால் தடவுவதினாலும் நோய்களை நீக்க முடியும். வைத்தியரால் கைவிடப்பட்ட நோயுற்றவர்களையும் மாற்ற முடியும் என்பதனையும் தற்கால மனோவசியக் கலைஞர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். 1462ம் வருடத்தில் வாழ்ந்த தத்துவக்காரர் ஒருவர் கைகளால் தடவிக் கொடுப்பதினால் நோய் நீங்கும் என அபிப்பிராயப்பட்டார். அதுமட்டுமில்லாமல் ஒருவருடைய பக்குவ நிலையாலும், திடசித்தத்தாலும் அவரிடத்தே ஒரு வகை காந்த சக்தி பிரகாசிக்கின்றது எனவும் கூறியுள்ளார்.

இக்கலையைப் பெற்றவரிடமிருந்து வெளிப்படும் காந்த சக்தி நோய் உள்ளவரின் உதிரத்திலும், பிராணனிலும் கலந்து சுகத்தைக் கொடுக்கின்றது. இத்தகைய பெருமை மிக்க வசியக்கலையை தற்காலத்தில் ஒரு சிலரே கற்று மனித குலத்திற்கு பெரும் நன்மை களைச் செய்து வருகின்றனர். இப்பொழுது இது சம்பந்தமான நூல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன.

இவ்வதிசயக் கலையை மேல் நாட்டவரும் கற்றுச் சமுதாயத்துக்கு நற்பணியாற்றுகின்றனர். இதனை மெஸ்மரிசம் என்றும் ஹிப்னாடிசம் என்றும் பெயர் சூட்டினர். மெஸ்மரிஸக் கலையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் பிரெடிக் அந்தோனி மெஸ்மர்.

இவர் 1733 மே மாதம் 13ம் திகதியில் பிறந்தார். 1766 ஆம் ஆண்டில் வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்றார். ரோமன் பாதிரியாரிடம் இவ்ஜீவகாந்தக் கலையை கற்றுக் கொண்டார். இதன் வியத்தகு இரகசியங்களை வெளிப்படுத்தினார். பலரது நோய்களைத் தூக்க நிலையில் வைத்து நீக்கினார். நோய்வாய்ப்பட்டு துன்பப்பட்டோர் இவரை நாடிச் சுகம் பெற்றனர். இவரது புகழ்பரவ இவர் மேற் பொறாமை கொண்ட சிலர் இவரது இந்த வைத்திய முறையைத் தடைசெய்யும்படி அரசிடம் முறையிட்டனர். விளைவு தடை செய்யப்பட்டது. இதனால் மெஸ்மர் அவர்கள் பாரிஸ் சென்றார்.

பல மாணவர்களுக்கு இக்கலையைப் போதித்தார். இந்த வைத்திய முறையானது தலையில் இருந்து பாதம் வரை மெதுவாகத் தொட்டுக் கீழ் நோக்கி இறக்குவதாகும். முதலில் நோயாளியை உறக்கத்தில் ஆழ்த்தி, உறுதியான சக்தி மிக்க மந்திர மயமான சொற்களைப் பிரயோகித்து நோய்களை நீக்குவார். தான் கண்டறிந்த இக்கலைக்குத் தனது பெயரையும் இணைத்து மெஸ்மரிஸம் என அழைக்க வைத்தார். இவர் 1941ல் பிரான்சிலிருந்து இங்கிலாந்துக்குப் பறந்தேன் என்று கூறியுள்ளார். இவரது மெஸ்மரிஸக் கலையைப்பற்றி டாக்டர் பிரேயிட் என்பவர் ஆராய்ந்தார். தான் கண்டறிந்த புதிய முறைக்கு ஹிப்னாடிசம் என்னும் பெயரை வைத்தார். பிரகாசமான கண்ணாடி உருண்டையைப் பார்க்க வைத்து நித்திரை வருவித்தலாகும். எனவே ஹிப்னாடிசமும், மெஸ்மரிசமும் செய்கை முறைகள் வேறுபட்டாலும் காந்த சக்தி அலை அலையாக நோயாளிகளிடம் போய்ச்சேர்வது ஒன்றாகும். இக்கலையைப் பழக முற்படுபவர்கள் முதலில் ஒழுக்க சீலர்களாக, தூயவர்களாக இருத்தல் வேண்டும்.

- நிர்மலமனம்
- நன்னெறியில் கவனம்
- கண்இமையா விழி
- சொல்நயஅருள் மொழி

ஆகிய இந்த நான்கிலும் நிறைவு பெற்றால்தான் சிறந்த மனோவசிய நிபுணராக வரலாம். மனோதிடம் தான் இக்கலை வளர்ச்சி பெற உதவும் அடித்தளமாகும். புராண வரலாறுகளையும் மகான்கள், தவசிரேஸ்டர்களின் வரலாறுகளைப் படிப்பதினாலும் மனோதிடத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதனால் எம்மிடத்தில் அடக்கம், ஞானம், பொறுமை என்பன தோன்றும்.

மனத்தை தன்வசப்படுத்தி தரணிக்கே சேவை செய்ய உதவும் இக்கலை ஓர் வகையில் மின்சார சக்தியை ஒத்திருக்கின்றது. இவ்விரண்டு சக்திகளும் மனிதர்களுக்கு அளப்பரிய நன்மையைச் செய்கின்றன. மின்சார சக்தியால் வீடுகள், சாலைகள் ஒளிமயமாகின்றன. பாரிய இயந்திரங்களை இயக்கி பல்வேறு தொழில்கள் செய்ய உதவுகின்றது. இன்று உலக நாடுகளின் செயற்பாடுகள் அனைத்திற்கும் உயிர்ச்சக்தியாக மின்சாரம் விளங்குவது போல மானிட வசிய சக்தியும் மக்களுக்கு உடல்உள ஆரோக்கியத்தையும் ஆயுள் விருத்தியையும் அமைதியையும் கொடுக்கின்றது. மலருக்குள் மணம் போல அலைக்குள் ஓசை போல அனைவரிடமும் இம்மகாசக்தி மறைந்து கிடக்கின்றது. இதனை பயிற்சிகள் மூலம் செயற்படுத்த சக்தி வெளிப்படும். மானிட வசியத்தில் ஒரு முறை சித்தியடைந்து விட்டால் அது உங்களை விட்டுப் பிரியாது. அதன் தேசஸ் உங்கள் உடலைச் சுற்றி பிரகாசித்துக் கொண்டே இருக்கும். எனவே சிந்தையில் உறங்கிக் கிடக்கும் சக்தியை உங்கள் தளராத முயற்சியால் வெளிப்படச் செய்யுங்கள். என்னால் முடியும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள் வெளிப்படும்



காந்த மனோவசியச் சக்தி மாநிலத்தில் அவலங்களால் அல்லற்படும் மக்களைக் காக்கும். அமைதியையும் மகிழ்வையும் கொடுக்கும். அள்ள அள்ளக் குறையாத தன்னை வெளிப்படுத்தியோருக்கும் தன்னால் பயன் அடைந்தோருக்கும் சஞ்சீவியாக நின்று பயன் அளிக்கும். இக்கலையை ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

இப்பூமியில் பிறந்து வளர்ந்து சனத்தொகையைப் பெருக்கியும் நோய்களுடன் போராடியும் வாழ்நாளை வீண் நாளாக்கி மடிவதில் என்ன பயன். கருவூரில் இருந்து திருவூருக்கு வந்து உண்டு, உடுத்தி, உறங்கி உல்லாசப் பொழுது போக்கி பிறர் வெறுக்க பாய்படுக்கையாகி மடிந்து போகலாமா? சேவையே உந்தன் உயிர் மூச்சு. வானத்து சந்திரனும் சூரியனும் ஓடும் நதிகளும் வீசும் காற்றும் தன்னலமற்று சேவை செய்கின்றன. பகுத்தறிவுள்ள நாம் சுயநலத்துடன் வாழ்ந்து வீட்டிற்கும், நாட்டிற்கும் பயனற்றவர்களாகின்றோம்.

எனவே ஆர்வமுற்றவர்களே!
இப்புனிதக் கலையை குருவின் மூலமாகக் கற்று குவலயம் செழிக்கச் செய்யுங்கள்.

எங்களுடன் வாழ்கின்ற மக்களைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ந்து பாருங்கள். சிலர் எப்பொழுதும் எதிலும் வென்று கொண்டேயிருக்கிறார்கள். மற்றும் பலரோ தொட்டதெல்லாம் தோல்விகளைச் சந்தித்து துன்பப்படுகின்றார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் வெற்றி பெறும் மனிதர்களிடம் மானிட வசிய சக்தி நிறைவாக இருக்கின்றது.

மகாத்மா காந்தி, ரவீந்திர நாததாகூர், சுவாமி விவேகாநந்தர், பகவான் அரவிந்தர் ஆகியோர் தாம் பெற்ற மானிட வசிய சக்தியால் அளப்பரிய தொண்டுகளைச் சமுதாயத்திற்குச் செய்தார்கள். இக்கலையை விருத்தி செய்வதில் ஆர்வம் ஏற்பட்டால் முதலில் தான் தன்னில் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். தன்னம்பிக்கை இல்லாவிடில் பிறர் நம்பிக்கையைப் பெற முடியாது. இக்கலைக்கு ஆரம்ப பயிற்சியாக தீர்த்த குரலும் தேறிய பார்வையிலும் சித்தி பெறல் வேண்டும். பயிற்சியே உங்களை உயர்த்தும் உந்துசக்தி. பாலர்கள் போல, மனம் குழம்பியவர்கள் போல எவரையும் பார்க்கக் கூடாது. பார்வையில் கனிவு, அருட்செறிவு, உறுதி அத்தனையையும் கலந்து இருத்தல் வேண்டும். எமது இதயத்தின் சாளரம் கண்கள். கண்களின் பார்வைகள் கருத்தோடு எதிர்ப்பாளரின் துன்பத்தை மன அதிர்ச்சியை விரக்தியை நீக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். அடுத்ததாகச் சொல்லும் வார்த்தைகள் உறுதியாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு சொற்களும் மந்திர சக்தி வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். எனவே இமையா விழிகளும் தீர்க்கமான குரலில் பிறக்கும் அருள் மொழியும் பெற்றுவிட்டால் உங்களால் சுகமும் மகிழ்வும் பெறுவர். நோய் உற்றவர்களுக்கும் மன அழுத்தத்தால் வாழ்க்கையில் வாழ முடியாது தத்தளிப்பவர்களுக்கும் உங்கள்சேவை வேண்டப்படுகின்றது.

இன்று பெரும்பாலான மக்கள் நோய்களாலும் கவலைகளாலும் பல்வகை அச்சத்தினாலும் நித்திரை இல்லாது தவிக்கின்றனர். நித்திரை வருவிக்கும் குளிசைகளும் அவர்களுக்குப் பயனளிப்பதில்லை. எனவே அவர்களுக்கு ஹிப்னாடிஸ்ஸத் தூக்கம்தான் நல்ல பலன்களைக் கொடுக்கும். எனவே எம்மை நாம் தூக்க நிலைக்கு கொண்டு போக வேண்டுமாயின் படுக்கையில் சௌகரியமாக படுத்துக் கொள்ள வேண்டும். இமைகளை மூடி கண்களை மேற்புறமாக உள்ளுக்கிழுக்க வேண்டும். மனதில் தூக்கம் என்னும் உறுதியான எண்ணம் இருக்க வேண்டும். எனக்குத் தூக்கம் வந்துவிட்டது, எனக்குத் தூக்கம் வந்து விட்டது , எனக்குத் தூக்கம் தூ..க்..க..ம், தூ..க்..க..ம்... இந்தப் பயிற்சியைத் தினமும் செய்ய இலகுவாக நித்திரை வந்துவிடும். முக்கியம் காலையில் விழித்தெழும்பும் நேரத்தை படுக்கைக்குச் செல்ல முன் தீர்க்கமாக மனதில் எண்ண வேண்டும். மருந்தில்லாத, மனதிற்கு அமைதி தரும் இந்த வழிமுறைகளை பின்பற்றி பயன் அடையுங்கள். ▭




உள்ளூராட்சிவார நிகழ்வில் மருத்துவ முகாம்



# போர்க்காலச் சூழ்நிலையில் பாதிப்புற்றோருக்கு உதவுதல்

*செ.ரவிசாந் (இளங்கவிஞன்)*

எமது இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் சொந்த மண்ணிலேயே அனாதைகள் ஆக்கப்பட்டு உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி, ஆதரிக்க உறவினர் இன்றி அல்லற் படுவோரே பாதிக்கப்பட்டவர்கள் என்ற பார்வைக்கு உட்படுகின்றனர். இவ்வண்ணம் கஷ்டப்படுவோருக்கு உதவுதல் எமது எல்லோருக்கும் உரிய தலையாய கடமையாகும். ஆனால் எமது மண்ணில் இருக்கும் பல மக்களுக்குத் தமது பொறுப்புக்கள் பற்றி உணர முடிவதில்லை. ஏதோ தாம் உண்டு தமது வேலை உண்டு என்று இருந்து விடுகின்றனர். எமது உடன் பிறப்புக்களுக்கு நாம் உதவாவிட்டால் யார் உதவுவது?

பாதிப்புற்றோருக்கு உதவுவதற்காக இன்று நமது நாட்டில் பல அமைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் அவ்வமைப்புக்களால் தனித்து நின்று பாதிப்புற்ற மக்களுக்கு உதவ முடியாது. ஆகவே எம் மண்ணின் மைந்தர்கள்தான் அவர்களின் தோளோடு தோள் நின்று உதவ முன் வர வேண்டும். துள்ளி விளையாடித் திரியும் இளம் நெஞ்சங்கள் பயிலும் பாடசாலைகளில் கருத்தரங்குகளை நடத்துவதன் மூலமோ, பொது இடங்களில் கூட்டங்களை வைப்பதன் மூலமோ பாதிப்புற்றோரின் அவலங்களையும் அவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய உதவிகளையும் பற்றி பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

பாதிப்புற்றோருக்கு உதவும் வழிவகைகள் ஆவன :

அவர்களுக்கு உலர் உணவு வகைகளைச் சேகரித்துக் கொடுப்பதன் மூலம் அவர்களின் ஆனைப்பசிக்கு சோளப் பொரியேனும் நாம் கொடுக்கலாம். இருக்க உறையுள் இன்றி கஷ்டப்படுவோருக்கு குடில்கள், கொட்டகைகள் அமைத்துக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்க முடியும். படிக்க மனம் இருந்தும் தமது கல்வியைத் தொடர முடியாமல் அல்லல் படும் மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்களைச் சேகரித்துக் கொடுப்பதன் மூலம் அவர்களின் அறிவுப்பசியை ஓரளவிற்காவது தீர்க்க முடியும்.

பாதிக்கப்பட்டவர்களினுடைய துன்பங்களில் பங்கெடுப்பதன் மூலம் அவர்களைச் சமுதாயம் தனது கீழ்த்தரமான பார்வை கொண்டு பார்ப்பதைத் தவிர்க்க முடியும். அவர்களின் நலனில் அக்கறையுடைய நிறுவனங்கள் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களைத் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல இடமளிக்க வேண்டும். அத்துடன் அவர்களது புனர்வாழ்வு வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் அவர்களின் மன


உழைச்சலை ஓரளவிற்காகிலும் போக்க முடியும். இதில் அரசின் பங்கும் மிகவும் முக்கியமானதாகும்.

இலங்கையில் இருதரப்பிற்குமிடையே இடம் பெறுகின்ற போரினால் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படும் நிலையை முடிவுக்கு கொண்டு வருவதன் மூலமே அவர்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்கவும், பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமரவும் முடியும். இது இவ்வாறு இருக்க நமது பங்கு என்ன? என்பதையும் நாம் சிந்தித்தல் வேண்டும். நிதியுதவி அளிப்பது ஒரு முக்கியமான செயலாகக் காணப்படுகின்றது. ஆனாலும் அது மட்டும் போதும் என்று நினைத்துவிட முடியாது. இவர்களது நிலமைகளை புரிந்துணர்வோடு கருத்திற் கொண்டு நமது நேசக்கரங்களை நீட்ட வேண்டும். மனித நேயத்தைப் பெருக்கி மனநிறைவினை அவர்களிடம் ஏற்படுத்த நாம் அனைவரும் முன்வர வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. இதனை உணர்ந்து செயற்பட நாட்டு மக்கள் அனைவரும் முன்வர வேண்டும்.


தயா மரக்காலை

THAYA TIMBER DEPOT

உரிமையாளர்: ச. கந்தசாமி



29, காங்கேசன்துறை, வீதி,
சுன்னாகம்.




# 5 E

**த. வாமதேவன்**

இன்றைய தகவல் தொழினுட்ப உலகுக்கு ஏற்றவாறு ஆக்கபூர்வமான சமநிலை ஆளுமையுடையவர்களை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாகும். எனவே இன்றைய நவீன மாற்றங்களுக்கேற்ப பாடசாலைக் கலைத்திட்டம் தொடர்ந்து அபிவிருத்தி செய்யப்படுவதுடன் தற்காலத் தேவைக்கேற்ப பாடத்திட்டங்களில் சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இன்றைய கலைத்திட்டம் தேர்ச்சிமையம், மாணவர் மையம், செயற்பாடு சார்ந்ததாகும்.

கல்விச் செயலொழுங்குகளின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் சிறந்த அடைவு மட்டம் பயனுறுதி மிக்க வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் தங்கியுள்ளது. இது மாணவர்கள் சுயமாக பாட அலகுகளையும் பிற விடயங் களையும் விளங்கிக் கொள்வதற்கான ஒரு செயற்திறன் மிக்க மாதிரியுருவாகும்.

புதிய இடைநிலைக் கல்விசீர்திருத்த செயற்பாட்டு முறையிலான பாடத்திட்டமிடல் 5E Model எனப்படும். ஆங்கில எழுத்து E ல் தொடங்கும் ஐந்து ஆங்கில எழுத்துக்களால் அழைக்கப்படும் மாதிரியாகும். அதன் படிகளாவன:

1. ஈடுபட வைத்தல் (Engagement)
2. ஆர்வத்துடன் ஆராய்தல்.(Exploration)
3. விளக்குதல் (Explanation)
4. விரிவாக்குதல் (Elaboration)
5. மதிப்பீடு (Evalution)

## ஈடுபடல் (Engagement)

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் ஆரம்பம் மாணவர்களை மகிழ்வுடன் ஈடுபடுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் கற்றலில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய படங்கள், செயற்பாடுகள், எடுத்துக்காட்டுக்கள் பிரச்சினை ஒன்றை முன்வைத்தல், வினாக்கள் எழுப்புதல் போன்ற செயற்பாடுகள் ஊடாக சிந்தனைக்கிளறல் மூலம் மாணவர்களுடைய கவனத்தை ஈர்க்க வேண்டும்.

நீண்டகால ஞாபகத்தில் உள்ள பகுதிகளை வெளிக்கொண்டு வருவதற்கும் நுண்ணறிவை மீட்பதற்கும் வழியேற்படும். இதன் மூலம் கண்டறிதலில் ஈடுபட மாணவன் சுயமாக தூண்டப்படல் வேண்டும். எல்லா

மாணவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறக்கூடிய தேர்ச்சி மட்டத்திற்கும் பொருத்தமான ஒரு பிரதேசமாக அது அமையவேண்டும். அடுத்த செயற்பாட்டுக்கு பிரவேசிக்கத்தக்க ஓர் ஊடகமாகவும் அது அமைய வேண்டும்.

## கண்டறிதல் (Exploration)

இங்கு பாட அலகுடன் சம்பந்தப்பட்ட அம்சங்கள் தேவையான அறிவுறுத்தற் படிவங்களுடன் வழங்கப்படும். இதற்குப் பொருத்தமான செயற்பாடுகள் ஆசிரியரால் ஏற்கனவே திட்டமிடப்பட்டுத் தயாரிக்கப்படல் முக்கியமானதாகும். மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களிடையே பயனுறு தொடர்பாடல் ஏற்பட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வர்.

குழுக்களைக் கண்டறிதல் படிவங்களைத் தயாரிக்கும் போது மாணவர்களுக்குத் தேவையான மூலாதாரங்கள் உபகரணங்கள், வளங்கள், குணநல உள்ளீடுகள் போன்றவற்றை இணைப்புகளில் உள்ளடக்கப்பட வேண்டும்.

## விளக்குதல் (Explanation)

மாணவர்களின் கண்டாய்வுகள் முன்வைக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும். இதில் மாணவர் தமது அபிப்பிராயங்கள், அவதானிப்புக்கள், கருதுகோள்கள், வினாக்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவதனால் தாம் பெற்ற அனுபவங்களை ஏனையோருக்கும் பகிருவர். தாம் கண்டறிந்தவற்றை தமது சொந்த மொழி நடையில் தொடர்பாடலுக்கு உட்படுத்துவர். குழுக்கண்டாய்வுகளை முழு வகுப்பிற்கும் சமர்ப்பிக்க வேண்டும். முதலில் சமர்ப்பித்த குழுவிற்கு முதலில் விரிவாக்கத்திற்கு வழி செய்ய வேண்டும். ஏனைய குழுக்களின் மேம்பாட்டிற்கான ஆலோசனைகளைக் கேட்க வேண்டும்.

## விரிவாக்குதல் ( Elaboration )

இப் படியின்போது விரிவாக்கம், விளக்கம் ஆகிய படிகளில் மாணவர்கள் வெளிக்கொணரத் தவறிய தகவல்களை ஆசிரியர் வெளிக்கொணருவது அவசியம். இது மூன்று மட்டங்களில் நடைபெறும். முதலில் அறிக்கை சமர்ப்பித்த குழுவிற்கும் அடுத்து பார்வையாளர்களுக்கும் இறுதியாக ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

கண்டாய்வின் போது கண்டறிந்த விடயங்களை பல்வேறு கோணத்தினூடாக அலசி, தொகுத்து தகவல்களிடையேயான தொடர்பைக் கூறி பாடத்தை முழுமையாக்குவது நன்று. இதன் போது பெற்ற தகவல்களைச் சமூக மேம்பாட்டிற்கும், வாழ்க்கைக்கும் பிரயோகிக்கக் கூடியயவர்களாக



மாற்றுவதற்கு ஆசிரியர்கள் வழி காட்டல் வேண்டும். முழுப்பாடத்திற்கும் பொருத்தமானவாறு குறிப்பெழுதி எண்ணக்கரு வரைபடத்தின் மூலம் வெளிப்படுத்துமான வரை ஊக்குவிக்க வேண்டும்.

## மதிப்பிடல் (Evalution)

இது முழுச்செயற்பாட்டின் மூலமும் தொடர்ச்சியாக நடைபெற வேண்டிய செயற்பாடாகும். மாணவர்கள் கற்றலில் ஈடுபடும் போது கற்றல், கற்பித்தல்மூலம். எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகளைத் தெளிவாகப் பெற்று கொள்வதற்கும் மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தை அடைவதற்குமாக கணிப்பீடும், மதிப்பீடும் நடாத்தப்படுகின்றன. கணிப்பீட்டைச் செயற்படுத்தும் போது ஆசிரியர்கள் பின்னூட்டல் முன்னோக்கிய ஊட்டல் என்பவற்றை முறையே மாணவரது பலவீனம் இயலாமையை இனங்கண்ட போதும் பலம், இயலாமையை இனங்கண்டு மேலும் விருத்தி செய்யும் நோக்கிலும் வழங்கலாம்.

5E முறை 2007 லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டாலும் அதில் சாதக பாதக தன்மைகள் காணப்படுகின்றன. வளமுள்ள பாடசாலைகளுக்கு இது சாதகமானதாக இருக்கும் என்றும் அத்துடன் மாணவர் தொகை அதிகமாக இருக்கக் கூடாது என்றும் கூறப்படுகிறது.

சில பாடசாசாலைகள் தமது பௌதிக வளத்திற்கு கூடுதலான மாணவர்களை உள்வாங்கி இருப்பதால் பல சவால்களை எதிர்நோக்குகின்றன. இதனால் குழுச்செயற்பாடு என்பது சாத்தியமற்றதொன்றாக காணப்படுகின்றது. ஆனாலும் தற்போது குணநல உள்ளீட்டு நிதியைப் பயன்படுத்தி இம்முறைக்கு வேண்டிய கற்றல் கற்பித்தல் சாதனங்களைத் தயாரித்து செயற்பாட்டை மேற்கொள்ள முடியும்.

எது எவ்வாறாக இருந்தபோதும் இதை அறிமுகம் செய்த கல்வியாளர் குழு மாணவர்களை மையமாகக் கொண்டு அவர்களது செயற்பாட்டை மேம்படுத்துவதையே நோக்காகக் கொண்டது. ஏனைய மாகாணங்களில் இந்த முறைக்கு எதிர்ப்பலைகள் சலசலப்புக்கள் தோன்றிய நிலையில் இதன் வடிவம் மாற்றம் பெறக்கூடிய நிலையும் ஏற்படலாம்.

***உசாத்துணை:*** உள்ளகப் பயிற்சிப் பாடசாலைகளின் அதிபர்கள் தொழில் வழிப்படுத்துனர்களுக்கான செயலமர்வு கையேடு. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, 2007.

இளைப்பாறிய நூலகர்

# திருமதி. இ. பாலசிங்கம்

அவர்களுடன் செவ்வி

(நூலகர் சேவையில் இருந்து இளைப்பாறினாலும் , சுன்னாகம் பொதுநூலகத்திற்குத் தினமும் வந்து நூலக சேவையிலுள்ளவர்களுடன் மட்டுமன்றி வாசகர்களுடனும் அளவளாவி, ஆலோசனைகள் தந்து, வளர்ச்சிக்கு உறுதுணையாக, ஊக்குவிப்பாளராக விளங்கும் திருமதி. இ. பாலசிங்கத்துடன் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் திருமதி . சுகன்யா கலையரசன் அவர்களின் செவ்வி.)

**செவ்வியாளர் :** வணக்கம், இளைப்பாறிய நூலகர் திருமதி. பாலசிங்கம் அவர்களே, இன்று உங்களைச் சந்தித்து உரையாடுவதில் மனம் மகிழ்கின்றேன். நீண்ட காலமாக நூலக சேவையில் இணைந்திருந்தீர்கள். இளைப்பாறிய போதும் சுன்னாகம் பொதுநூலக வளர்ச்சியை கருதி பல பணிகளை ஆற்றி உதவுகின்றீர்கள். இந்நூலகத்தின் ஸ்தாபிதம் பற்றி நேரடியாகவே உங்களுக்குத் தெரிந்திருக்கும். வாசகர்களுக்காக அவற்றை மீட்டிப் பார்த்து தெரிவிக்க முடியுமா?

**திருமதி. பாலசிங்கம்:** வணக்கம். முதற்கண் என்னையும் எனது அனுபவங் களையும் பற்றி செவ்வி காணவிழைந்தமைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நான் இந்த ஊரைச் சேர்ந்தவள். அதனால் இப்பிரதேசத்தில் பிரதான சேவை நிறுவனமான இந்நூலகத்தின் சமூக முக்கியத்துவத்தால் தினமும் இதன் வளர்ச்சியை கண்கூடாகப் பார்க் கின்றேன். சேவையில் இல்லாவிட்டாலும் இந்நூலக அங்கத்தவர் என்ற பிணைப்பு எனக்குண்டு. இந்நூலகத்தில் இருபது ஆண்டுகள் கடமை புரிந்து இதன் வளர்ச்சிக்குப் பாடுபட்ட பசுமையான நினைவுகள் நெஞ்சில் ஆழமாகப் பதிந்துள்ளன.

சுன்னாகம் பரந்துபட்ட பிரதேசம். இங்கு முன்னணிப் பாடசாலைகள், கல்லூரிகள், அலுவலகங்கள், பல்கலைக்கழக பிரிவுகள் உள்ளன. எனவேதான் அக்காலத்தில் சுன்னாகம் பட்டண சபைத்தலைவராக இருந்த செனட்டர் பொ. நாகலிங்கம் அவர்கள் இந்நூலகத்தை 1964ஆம் ஆண்டில் வாடகை வீட்டில் ஆரம்பித்தார். பின்பு சபைநிதி, அரச நிதி, பொதுமக்களின் நன்கொடை இவற்றைப் பயன்படத்தி 1974ஆம் ஆண்டில் இக்கட்டிடத்தின் கீழ்ப்புகுதியையும் பின்பு 1976ல் மேற்தளத்தையும் பூர்த்தி செய்து வளர்ச்சிக்கு வழிவகுத்தார்.

தூரநோக்குடன் அவர் மேற்கொண்ட இந் நற்செயலின் பயனை 45ஆண்டுகளாக இப்பிரதேச மக்களும் ஏனையோரும் அனுபவிக்கக் கூடியதாகவுள்ளது. காணியை வழங்கிய வர்களின் நன் மனத்தையும் நினைவு கூர வேண்டும். ஆலயங்களுக்கு தர்மசாதனம் செய்வது போல பாடசாலைகள், நூலகங்கள், மருத்துவமனைகள், மற்றும் சேவை நிலையங் களுக்கும் காணித்தேவை உண்டு. திட்டமிடப்பட்ட ஒரு நகரமாக சுன்னாகம் உருவாகுவதற்கு காணிதட்டுப்பாடான நிலை இருக்கின்றது. சமூக நோக்கத்துடன் மக்கள் செயற்பட்டால் தான் சமூகமேம்பாடுகள் சாத்தியமாகும் எனக் கருதுகிறேன்.

**செவ்வியாளர் :** சுன்னாகம் பொதுநூலகத்திற்கும் புதிதாக காணி தேவைப்படுகின்ற நிலையில் உங்கள் கருத்துக்கள் பொருத்தப்பாடகவே அமைகின்றன. இந்நூலகம் அதன் சேவைகளை விஸ்தரிப்பதற்கும் புதிய பகுதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இடப்பற்றாக்குறை உணரப்படுகின்றது. பொது மக்கள் ஒன்று சேர்ந்து நிலத்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது உங்கள் கருத்தாகக் கொள்ளலாமா ?

**திருமதி பாலசிங்கம் :** ஆம்.... ஐம்பது ஆண்டுகால நூலகம் அடுத்து வரும் ஐம்பது ஆண்டுகாலத்தேவைகளுக்கு உரியவகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். அவ்வாறே பிரதேசமக்கள் யாவரும் ஒரு குடும்பத்தில் இருவர், மூவர் என அங்கத்தவராக இணைந்து நூலக வளர்ச்சிக்கு உதவுவதுடன் தமது கல்வி, பொழுதுபோக்குத் தேவைகளுக்கும் நூலகத்தைப் பயன்படுத்த வேண்டும்.

அக்காலத்தில் பல வகைப்பட்ட கல்விமான்களும் இங்கு வந்தார்கள்; ஒன்று சேர்ந்து பாடுபட்டு நூலகத்தையும் வளர்த்தார்கள். நூலகத்தால் தாமும் வளர்ந்தார்கள். மக்கள் நூலகக் கட்டிடத்துக்கு மட்டுமின்றி நூல்களை வாங்கி அன்பளிப்பாகவும் வழங்கினார்கள். பெறுமதியான பலபுத்தக அன்பளிப்புகளைப் பற்றி என்னால் கூறமுடியும். அவ்விதமாக இக்காலத்தில் ஏன் உதவ முன்வரவில்லை? பிரிட்டிஸ் கவுன்சில், ஏசியா பவுண்டேசன், அமெரிக்க தூதரகம் போன்றவற்றிலிருந்து வருடாவருடம் அன்பளிப்புகள் கிடைத்தன. ஆங்கில நூல்களின்பாவனை 1990க்கு முன்வரை சிறப்பாக இருந்தது. தற்காலத்தில் ஆங்கில நூல் பாவனை குறைந்துவிட்டது. ஆங்கிலக்கல்வி முறைமாற்றம் இதற்கு காரணமாக இருக்கலாம். விவசாய அதிகாரியாக இருந்த திரு . அல்போன்ஸ் என்பவர் யாழ். சுண்டுக்குளியில் இருந்து அக்காலத்தில் புகையிரதம் இருந்தது. அதில் ஏறி காலை 9.00 மணிக்கு வந்தால் மாலை 5.00மணிக்கு மேலே தான் திரும்பிச்செல்வார். சாப்பாடு, தண்ணீர், எல்லாம் கொண்டு வருவார். அவ்வாறே அரச ஓய்வூதியரான திரு. தி. குலவீரசிங்கம் என்பவர் இந்நூலகத்தில் தான் படித்துப்பெற்ற அறிவின் மூலமே தான் ஒரு ஆங்கிலப் பேச்சாளனாக வரக்கூடியதாக இருந்ததாகக் கூறியுள்ளார்.

வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்கும் என்ற கருத்துக்கு ஏற்ற உதாரண புருஷர்களாக இவ்வாசகர்களை நான் கூறமுடியும்.

**செவ்வியாளர் :** அக்காலத்தில் கருத்தரங்குகள், பேச்சுக்கள், விளையாட்டுவிழாக்கள் என்பன நடைபெற்றதாக கூறக்கேள்விப்பட்டிருக்கின்றேன். அவை பற்றி...

**திருமதி. பாலசிங்கம் :** வாசகர் நன்மை கருதி வாசகர் வட்டம், நூலக ஆலோசனைக்குழு என்பன சிறப்பாக இயங்கின. நூலகத்தை சமூகத்துடன் இணைப்பவை இச் சபைகளே. இவற்றின் அனுசரணையுடன் சமய வகுப்புக்கள், மாதாந்தக் கருத்தரங்குகள் சமய, அரசியல் இலக்கியக்கூட்டங்கள் நடைபெற்றன. பலர் இதில் பங்குபற்றியுள்ளார்கள். இந்தியாவில் இருந்தும் பல பிரமுகர்கள் இங்கு வந்து உரையாற்றி இருக்கின்றார்கள்.



**செவ்வியாளர் :** நாட்டின் இனமோதல்கள் காரணமாக பல சேவைகளைத்தொடர முடியாத நிலை இருப்பது உண்மைதான். இடப்பெயர்வுக்காலத்தில் நூலகம் பாதிக்கப்பட்டது பற்றிக்கூறமுடியுமா?

**திருமதி பாலசிங்கம் :** நான் சேவையாற்றிய போது 1983, 1987, 1990, 1993, 1995 காலப்பகுதிகளில் நாட்டுக்குழப்பங்களால் நூலகம் பெரிதும் பாதிக்கப்பட்டது. புத்தக இருப்பு வெளியில் வீசப்பட்டு மழையில் நனைந்து பழுதாகின. இதன் மூலம் சுமார் 2000 புத்தகங்களை 1995 இல் இழந்தோம். ஆயினும் பெருமளவு நூல்களைப் பலத்த சிரமங்களின் மத்தியில் காப்பாற்றப்பட நடவடிக்கை எடுத்தோம்.

**செவ்வியாளர் :** சக ஊழியர்கள் பற்றி...

**திருமதி பாலசிங்கம் :** எனது காலச் சேவையில் திரு. சி. குமாரவேல், திருமதி. சிவபாக்கியம், திரு. சி. சிவஞானம், திருமதி. ச. கமலநாதன், திரு.க. துரைசிங்கம், (காலமாகிவிட்டார்) திரு. க. தேவமனோகரன் போன்றவர்களின் மனப்பூர்வ ஒத்துழைப்புக்கள் அமையப்பெற்றமைக்கு நன்றி கூற வேண்டும். இங்கு கடமையாற்றியமை எனது சிறந்த பேறாகவே கருதுகின்றேன். இனிவரும் காலத்திலும் நூலகரும் சகல ஊழியர்களும் நூலக வளர்ச்சிக்குப் பாடுபட்டு உழைத்து நூலகம் சிறந்தோங்க வேண்டுமென விரும்புகிறேன். பிரதேச சபை அதிகாரிகளும் நூலகத்தின் வளர்ச்சிக்கு உரிய மதிப்பும் முக்கியத்துவமும் வழங்கி ஊக்குவித்து வருகின்றார்கள். சகலருக்கும் இறை ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**செவ்வியாளர் :** நன்றி அம்மா. உங்கள் கருத்துக்கள் அநுபவம் சார்ந்தமையாக இருந்தன. எனவே யாவரும் இதனைக் கவனத்திற் கொள்வோம். நன்றிகள்.

### முக்கிய மூன்று

மதிக்க வேண்டிய மூன்று — முதுமையானோர், மார்க்கம், சட்டம்
நேசிக்க வேண்டிய மூன்று — நேர்மை, தூய்மை, கடின உழைப்பு
போற்ற வேண்டிய மூன்று — அறிவு, அழகு, பண்பு









# சோதிடக்கலை என்பது மெய்ஞ்ஞானம், புவியியல், விஞ்ஞான அறிவு கொண்டது.

**– உடுவில் சி. சதானந்தன்**

மனிதனின் வாழ்க்கையோடு தொடர்புடையதும், அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றுமான கலைதான் சோதிடக்கலை. மற்றைய கலைகளை விட இந்தச் சோதிடக்கலை மனிதவாழ்வில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. பூமியில் மனிதன் பிறப்பதற்கு கிரகங்களே காரணமாக அமைந்துள்ளன. சோதிடக்கலை மூன்றுவித அம்சங்களைக் கொண்டதாக விளங்குகிறது.


முதலாவது மெய்ஞ்ஞானம், இரண்டாவது புவியியல், மூன்றாவது விஞ்ஞானம். மெய்ஞ்ஞானத்தில் ஆரம்பமாகிய சோதிடக்கலை புவியியலுடன் இன்றை ய விஞ்ஞான யுகத்துடனும் தொடர்புடையதாக அமைந்திருக்கின்றது.



## மெய்ஞ்ஞானத்தில் சோதிடம்

சிவபெருமான் தன் அருளை அவ்வப்போது அருளி ஜீவராசிகளுக்கு உண்டான ஏழுவகையான பண்பாட்டினை பிரம லிபி என்ற பெயரில் ஒரு தேவரகசியமாக அருள்பாலித்து வந்தார். அதுவே தலையெழுத்து என்றும், ஊழ்வினை, விதி என்றும் பெயர் பெறுகின்றது. ஏழு படைப்புக்களாவன: ஆயுள், தொழில், பொன், வித்தை, செல்வம், மனை, மரணம். இந்த ஏழு தேவ இரகசியங்களையும் படைத்தல் தொழிலைச் செய்கின்ற பிரமனுக்கு அருள, பிரம்மா மனிதனைப் படைக்கும்போது இந்த ஏழு தன்மைகளையும் மனிதனுக்குச் சோதிடப் பலன்களாக அமைத்து விடுகிறார்.

ஆதியிலே பிரமனுக்கு அருளப்பட்ட இவைகள், பிரம்மாவினால் சப்தரிஷிகளுக்கு அருளப்பட்டு, சப்தரிஷிகளால் மெய்ஞ்ஞானத்தின் மூலம் பூமியில் வாழும் மனிதர்களுக்குச் சோதிடப்பலன்களாக அருளப்பட்டுள்ளன.




பூமியிலுள்ள உயிரினங்கள் உருவாகுவதற்குக் கிரகங்களே காரணம். கருப்பையில் உயிரினம் உருவாகிப் பிறக்கும் பத்து மாதங்களுக்கும் (அதாவது முதல் மாதம் தொடக்கம் பத்து மாதம் வரையும் ) நவக்கிரகங்களில் ஆதிக்கம்தான் காரணம். பிறந்த நேரத்தை வைத்துக் கணிதம் செய்யப்பட்டு லக்கினம் முதல் பனிரெண்டு பாவகம் வரை கிரகநிலைகளாகவும் நவாம்ச நிலைகளாகவும் சோதிடத்தில் கணிக்கப் பெற்று, பிறந்தது முதல் இறக்கும்வரை மனிதனுக்கு நன்மை தீமைப் பலன்களாக நடைபெற்று வருகின்றன. இது மெய்ஞ்ஞான வழித் தோன்றலாகிய சோதிடம்.

## புவியியல் ரீதியான சோதிடக்கலை

மெய்ஞ்ஞான சோதிடக்கலையில் பூகோள சாஸ்திரமும் இடம் பெறுகிறது. என்பதற்கு சோதிட நூல்களில் ஆதாரங்கள் உள்ளன. கிரகங்களின் பலன்கள் பூமியிலுள்ள மனிதனுக்குத்தான். அண்ட வெளியிலுள்ள கிரகங்களும் வானில் உள்ள நட்சத்திரங்களும் பூமியிலுள்ள மனிதனின் வாழ்க்கையுடன் தொடர்புடையன. சப்தரிஷிகள் மெய்ஞானத்தால் யோசனை தூரமாகக் கணக்கிட்டு கிரகங்கள் நட்சத்திரங்கள் நிற்கும் தூரங்களை (பூமியிலிருந்து அவை நிற்கும் நிலையங்கள்) கணித்திருக்கின்றார்கள். விஞ்ஞான அறிவு பெருகியதும் மனிதன் விஞ்ஞானக் கருவிகளின் மூலம் வானியல் ரீதியாக தற்பொழுது இவற்றைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

சோதிடக்கணிதத்தில் வரும் விகலை, கலை, தற்பரை, விநாடி, நாடிகள், நாழிகைகள் யாவும் பூகோளத்தில் பாதைக்கணக்குகளாகவும், நேரமாற்ற வித்தியாசங்களையும் புவியியல் அளவுகளாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.



## விஞ்ஞானத்தில் சோதிடக்கலை

முனிவர்களின் மெய்ஞ்ஞானத்தால் கண்டறியப்பட்டு கிரகநிலைகளில் கணிக்கப்பட்ட கிரகங்களை இன்று விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களான கருவிகள் மூலம் அக்கிரகங்களில் சென்று மனிதன் வசிப்பதற்கு விஞ்ஞான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. சந்திரனில் இறங்கிய அப்பலோ; செவ்வாய், சுக்கிர கிரகங்களை நோக்கிச் செல்லும் விண்கலங்கள்; குரு கிரகத்துடன் மோதிய வால் நட்சத்திரம் போன்றவற்றை கண்களால் காணக்கூடியதாக இருந்தன.

கிரகங்களின் ஆதிக்கத்தில் உருவாகி, பூமியில் பிறந்து, கிரகங்களின் பலாபலன்களின்படி, வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதன், இன்றைய விஞ்ஞானயுகத்தில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மூலம் அக்கிரகங்களில் குடியேறி வசிப்பதற்கான முயற்சிகள் செய்து கொண்டிருக்கின்றான். இதுவே மெய்ஞ்ஞான தோன்றலாகிய சோதிடத்துக்கும் விஞ்ஞான சோதிடத்துக்குமுள்ள தொடர்பாகும்.


## மெய்ஞ்ஞான சோதிடக்கலை

வானம், பூமி என்பன இயற்கையின் தோற்றங்கள். இவ்விரண்டு தோற்றங்களும் மனிதனின் கண்பார்வைக்குத் தெரிகின்றன. பூமியில் மனிதர்களும் மற்றைய உயிரினங்களும் வசிக்கின்றன. வானத்தில் நட்சத்திரங்களும் வான்வெளியில் கிரகங்களும் உள்ளன. இக்கிரகங்களில் பூமியும் ஒன்று. கிரகங்கள் வான்வெளியில் சுற்றியபடி செயற்படுகின்றன. வானத்திலுள்ள நட்சத்திரங்களை இரவிலும் கிரகங்களில் சூரியனைப் பகலிலும் சந்திரனை இரவிலும் மனிதர்களாலும் பல உயிரினங்களாலும் காணக்கூடியதாக உள்ளன. ஏனைய கிரகங்கள் மின்னும் நட்சத்திரங்களைப்போல இரவில் தெரிகின்றன.


பூமியில் வாழும் மனிதர்கள் வானத்திலுள்ள நட்சத்திரங்களையும், வான்வெளியில் சுற்றும் கிரகங்களையும் ஞானசக்தியால் (மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம்) கண்டறிந்து பூமியில் வாழும் மனிதவாழ்வோடு தொடர்புடைய வானியல், புவியியல் கலைகளாக உருவாக்கியுள்ளார்கள். அதுதான் வானியல் சோதிடக்கலை எனப்படுகின்றது. (Astronomy and Astrology) இவ்வானியல் சோதிடக்கலை மனிதவாழ்வில் இரண்டு விதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஒன்று மெய்ஞ்ஞான சோதிடக்கலை. மற்றையது விஞ்ஞான சோதிடக்கலை.

மெய்ஞ்ஞான சோதிடக்கலை மதங்களின் புராண, இதிகாசங்களுடன், சமய வழிபாட்டு விதிமுறையுடன் அமைந்த கலையாகும். மெய்ஞ்ஞான சோதிடக்கலை மூலம் மனிதவாழ்வின் முக்காலங்களாகிய கடந்தகாலங்களில் நடந்த, தற்பொழுது நடந்துகொண்டிருக்கின்ற, வருங்காலத்தில் நடக்கப்போகும் வாழ்வின் பலாபலன்களை, கிரகங்களை அறிந்து நடக்கும், நடக்கப்போகும் நன்மை

Northern Stars



Stars of the Middle Heavens



Southern Stars





தீமைகளைத் தெரிந்து, மனிதன் செயற்படக்கூடிய ஒரு வழிகாட்டியாக இருப்பதுதான் மெய்ஞ்ஞான சோதிடக்கலை முறை.

ஆங்கில விஞ்ஞான வானியல் சோதிடக்கலை தெய்வநம்பிக்கையுடன் பூமியில் வாழும் மனிதர்களை வானவீதியில் சுழன்றுவரும் கிரகங்களில் சென்று குடியேறி, வசிப்பதற்கான ஆய்வுகளைச் செய்துவருகின்றன. இது எல்லோரும் அறிந்த விடயமாகும். பாடசாலைகளிலும், கல்லூரியிலும், பல்கலைக் கழகங்களிலும் ஆங்கில வானியல் சோதிடக்கலையை இன்று ஒரு பாடமாகக் கற்பிக்கின்றார்கள். மாணவ, மாணவிகளும் விஞ்ஞான வானியல் கலையில் ஆர்வமுடையவர்களாகக் கற்றுவருகின்றார்கள்.

வானமண்டலம் கிரகநிலை சம்பந்தமாக ஆங்கிலத்தில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. நட்சத்திர மண்டலம் சம்பந்தமாக Philips Modern School Atlas ல் வெளிவந்த வரைபடம் இத்தொடரின் இறுதியில் இடம்பெற்றுள்ளது.

உசாத்துணை: Philips Modern School Atlas 1981



நகைச்சுவைச் சித்திரம்

# எழுதாத எழுத்தாளன் எழிலன்

பொ. சண்முகநாதன்

(சண் அங்கிள்)

"எழுதுவதென்பது அப்படி ஒன்றும் பாரதூரமான காரியமில்லை. நாலு புத்தகத்தை வாசித்துவிட்டு, அதிலை ஒரு நுள்ளு, இதிலை ஒரு கிள்ளு, அடுத்ததிலை ஓர் அள்ளு இப்படியாக எடுத்தெடுத்து எழுதிவிட்டுக் கையெழுத்தைப் போடவேண்டியதுதான், எழுத்தாளனாகி விடலாம்.

இப்படியில்லாவிட்டால் அவன் பேசுவது, இவன் பேசுவது, அங்கை நடப்பது, இங்கை நடப்பது இப்படியான சம்பவங்களை யெல்லாம் செருகி கதை கட்டுவது பெரியகாரியமோ?

சுருக்கமாகச் சொல்லுவதாயிருந்தால் சைக்கிள் கடை மணியத்தின் வேலையைப் போலத்தான் இந்த எழுத்தாளரின் வேலையும்! அவனும் ஊர்ஊராகத் திரிந்து 'பார்' எடுத்தால் போதும். பிறகு அங்கை ஒரு சில்லு, இங்கை ஒரு சில்லு, அடுத்த வீட்டிலை ஒரு மட்காட் ; எதிர் வீட்டிலை ஒரு 'செயின் கவர்' இப்படியாகச் சேர்த்து ஒரு சைக்கிள் செய்து விடுவான்.

இது தெரியாமல் இந்த எழுத்தாளர்கள் எல்லாரும் தலைகால் தெரியாமல் திரிவதும், அவர்களையெல்லாம் கடவுளைக் கண்டது மாதிரிப் போற்றித் திரிவதும் அர்த்தமற்றது.

இன்னும் சிலர் 'பேப்பரிலை' எழுதினால்தான் எழுத்தாளன் என்று சொல்லுகிறார்கள். இது சரியான முட்டாள்தனம். நானும் அந்தக்காலத்தில் ஏராளமாக எழுதியிருக்கிறேன். ஆனால் ஒன்றுகூட பேப்பரிலை வரவில்லை; பேப்பருக்கு அனுப்பியதுமில்லை. அப்படியானால் என்னை எழுத்தாளன் இல்லையென்றா சொல்லுவது?

எழுத்தாளர்களுக்கெல்லாம் பத்திரிகை அலுவலகங்களில் பழக்கமான ஒருவரேனும் இருப்பார். அவரின்றி ஓர் அணுவும் அசையாது. எங்களுக்கும் அப்படி யாராவது இருந்தால் நாங்களும்தான் ஏராளமாக எழுதலாம்.



அங்க பாருங்கோ அவையளும் 'எழுதியவன் ஏட்டைக் கொடுத்தான். படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என்பதுபோல் ஏதேதோ பத்திரிகைகளில் எல்லாம் எழுதுகிறவையாம். எழுதட்டும், ஆனால் நான் பேசிறதை எல்லாம் கேட்டுவிட்டு அதையும்கூட எழுதிப்போடுவினம் என்றுதான் பயமாயிருக்கு."

மேற்படி சத்தான வார்த்தைகளையெல்லாம் தனது முத்தான வாயால் அடிக்கடி உதிர்த்துவிடுபவன்தான் எழிலன். அவன் எங்களூர் நூல்நிலையத்தின் பொறுப்பாளன். நூல்நிலையத்தில் யாராவது எழுத்தாளனும் இருந்து வேறு பலரும் கூடியிருந்தால் இப்படியான வசனங்களை அவிழ்த்துவிடுவான்.

எழிலன் நூல்நிலையத்தின் பொறுப்பாளனே தவிர அவ்வளவாக நூலறிவு நிரம்பியவனல்ல. அவன் எழுதுவது ஒரு திறமை என்பதையோ, எழுத்தாளன் என்பவன் ஓர் உயர்ந்த பிறவி என்பதையோ இலேசில் ஒப்புக்கொள்ளமாட்டான். தன்னால் முடியாத ஒரு கலை - தன்னால் நுழையமுடியாத ஒரு துறை எப்பொழுதும் 'மகா மட்டமானதே' என்பது அவனது எண்ணம்.

இரண்டொரு எழுத்தாளர்கள் அந்த நூல்நிலையத்தில் அடிக்கடி புத்தகங்கள் எடுப்பதை வைத்துக்கொண்டு எழுத்தாளர்கள் புத்தகங்களைப் பார்த்துத்தான் எழுதுகிறார்கள் என்றும் தனது நூல்நிலையமும் தானும் இல்லாவிட்டால் அந்த எழுத்தாளர்கள் எழுதவே முடியாது என்றும் உண்மையாகவே எழிலன் எண்ணிக் கொண்டிருக்கிறான்.

பத்திரிகையில் எழுதுவதற்குத் தகுதி தேவையில்லை; எப்படியும் எழுதலாம்; எதையும் எழுதலாம். ஆனால் அது பிரசுரமாவதற்குப் பத்திரிகை அலுவலகங்களில் பழக்கமான யாராவது ஒருவரேனும் இருந்தே ஆக வேண்டும். என்பதும் எழிலனின் எண்ணம்.

முடிவாக எழிலன் "உண்மையான எழுத்தாளனென்றால் அவன் எழுதமாட்டான். இப்படியாக யோசித்தபடிதான் இருப்பான். எப்போதாவதுதான் எழுதுவான். அதையும் பத்திரிகை ஒன்றுக்கும் அனுப்பமாட்டான்" என்று நிமிர்ந்து கைகட்டியவாறு சொல்லுவான்.

தன்னால் முடியாத ஒன்று மற்றவர்களால் முடிவதைப் பொறுக்க மாட்டாத எழிலனிடம் நூல்களிலிருந்து எடுத்து எழுதுவது திருட்டென்றும், திருடி எழுதினால் கண்டுபிடிக்கப்பட்டு அவமானப்பட

வேண்டும் என்றும், நீ ஏதாவது கதை, கட்டுரை எழுத்தித் தா எப்படியிருக்கிறது பார்ப்போம். என்றும், யாராவது கூறினால் அதற்கெல்லாம்கூட விதண்டாவாதமான பதில்கள் சொல்லுவான்.

நேற்றைய தினம் இந்த எழுத்தாத எழுத்தாளன் பலர் மத்தியில் வலிந்து கதைக்கப்போய் சரியாக மாட்டிக் கொண்டான்.

நூல்நிலையத்தில் நான் 'திருவாசகம்' என்ற நூலை எடுத்துக் கொண்டு வெளியே வந்ததும், 'திருவாசகம் போகிறது. இனி இதிலிருந்து கதை கட்டுரைகள் எல்லாம் தயாரிப்பார்' என்றான் எழிலன்.

உடனே அங்குநின்ற பலர் "சிறுகதைகளும் நகைச்சுவைக் கட்டுரைகளும்தானே அவர் எழுதிவருகிறார். சிறுகதைகளும் நகைச்சுவைக் கட்டுரைகளும் திருவாசகத்திலிருந்து எப்படி எடுத்து எழுதுவதாம்? அப்படித்தான் எடுத்து எழுதினாலும் போயும் போயும் பொலீஸ் நிலையத்தில் களவெடுத்த கதையாகவல்லவா முடியும்" என்று எழிலனுடன் காரசாரமான விவாதம் தொடங்கிவிட்டனர்.

இறுதியில் எழிலன் தனது தோல்வியைத் தற்காலிகமாக ஒப்புக் கொண்டான். "ஏதோ எழுதுங்கோ. எழுதுவதில் குறை ஒன்றுமில்லை. படிப்படியாகத்தான் வளரவேண்டும். முதலில் அறையில் ஆடித்தான் பிறகு அம்பலத்தில் ஆடவேண்டும்" என்றான்

---

தொகுத்தவர்: சி. தர்ஷினி

- நல்ல குரு அமைந்தால் ஆண்டவன் கொடை
- நல்ல மனைவி அமைந்தால் ஆண்டவன் கருணை
- நல்ல பிள்ளைகள் அமைந்தால் ஆண்டவன் அருள்
- தந்தையும், தாயும் கண்கண்ட தெய்வங்கள்
- வாழ்க்கை என்பது பெயர் தெரியாத ஊருக்கு வழி
- நன்மையும் தீமையும் பிறர் தர வாரா
- அன்னையின் ஆசியிலே ஆண்டவனைக் காணலாம்
- பிள்ளைகளின் நற்குணத்துக்கு பெற்றோர் துணை
- நம்பிக்கை உன் வாழ்க்கை
- அதிக ஓய்வு அதிக வேதனை
- நாம் பேசுவது தங்கம் என்றால் பேசாதிருப்பது வைரம்.
- முதியோரை மதித்து நட ஆனால் உன்னை அவமதியாதே.
- இலட்சியம் இல்லாத வாழ்வு துடுப்பில்லாத படகு போன்றது.
- மலருக்கு மணம் போல் மனிதருக்கு மானம்.
- உலகில் மலிவானதும் அன்புதான் பெறுமதியானதும் அன்புதான்.
- நான் எப்படியிருப்பேன் என்பதைத் தெரியப்படுத்தவே தாய் என்ற பாத்திரத்தை இறைவன் படைத்தான்.



# புறநானூற்றின் கட்டமைவு

– சைவப்புலவர் கு. றஜீவன் B.A

காலம் கண்ட பழந்தமிழர் கையாண்ட அர்த்தமுள்ள வாழ்வுக் கலாசாரத்தின் பதிவேடுகள் சங்க இலக்கியங்கள். இவற்றின் இலக்கணங்களை செம்பாகமாக வரையறுத்து வைத்தது தொல்காப்பியம். தமிழர் வாழ்வியலில் இலக்கியப் பொருளாக அமைந்தவை அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும்: அவற்றுள் இன்பஞ்சார் விபரங்களை எல்லாம் அகத்திணை என்ற பகுப்பிலும் அறம், பொருள் சார் விழுமியங்கள் அனைத்தையும் புறத்திணை என்ற பகுப்பிலும் பொதிந்து வைத்தார் தொல்காப்பியர் .

தொல்காப்பியரின் புறத்திணை இலக்கணங்கள் முழுவதற்கும் ஒப்பற்ற இலக்கியமாய் திகழ்வது எட்டுத்தொகை நூல்களுள் எட்டாவதாகிய புறநானூறு. இதன் பொருள் வளமும் இலக்கியத்தன்மையும், கவிதை மாண்பும், சொல்இறுக்கம், பொருட்பொலிவு, முதலாயினவும் தண்டமிழின் மேலாந்தரம். இவற்றையிட்டு சில விபரங்களை நாங்கள் அறிந்து கொள்ளலாம்.

தொல்காப்பியரின் புறத்திணை இயல்துறைகளும், துறை ஒவ்வொன்றுக்கும் திணைகளும் என்ற அமைப்பில் உள்ளது. அவர் குறித்த திணைகள் கரந்தை, காஞ்சி, கைக்கிளை, தும்பை, நொச்சி, பாடாண்திணை, பெருந்திணை, பொதுவியல், வஞ்சி, வாகை, வெட்சி எனப் பதினொரு வகைப்படும். அவர் குறித்துள்ள துறைகள் அரச வாகை, ஆனந்த பையுள், குடிநிலை உரைத்தல், எருமை மறம் , குதிரை மறம் சிறியறிவுறு முதலாக 65 வகையினதாகும்.

புறநானூற்றில் 400 செய்யுட்கள் மூல ஏடுகள் எல்லாவற்றிலும் குறைவின்றி இருப்பதாக (அழிந்து போன இரண்டு தவிர) ஆய்வியலாளர் கூறுகின்றார்கள். இந்நூற்று பழைய உரைக் குறிப்புகளும் இருந்திருப்பதை டாக்டர் உ. வே. சாமிநாதஐயரின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவற்றின்படி புறநானூற்றுச் செய்யுள் ஒவ்வொன்றுக்கும் திணைகளும், துறைகளும் வெவ்வேறு தெரிந்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுக்கு இணங்க வாகைத்திணை தாபதவாகைத்துறை, பொதுவியல்திணை, தாபதநிலைத்துறை, பொதுவியல் திணை, கையறுநிலை, வெட்சித்திணை, உண்டாட்டுத்துறை, நொச்சித்திணை, செருவிடை வீழ்தல் துறை,

தும்பைத்திணை, எருமைமறத்துறை, கரந்தைத்திணை, வேதியல்துறை, முதலியவையாக திணைகள் துறைகள் குறிக்கப்பட்டு இருக்கின்றன. இவைபற்றி நச்சினார்க்கினியர் தொல்காப்பிய புறத்திணை இயலில் "கொடுப்போர் ஏத்தி" எனத் தொடங்கும் சூத்திர உரையில் பின்வருமாறு குறிப்பிட்டு இருக்கிறார். 'புறநானூற்றுக்கு இலக்கணம் அகத்தியமும் தொல்காப்பியமுமே. இதில் ஒவ்வொரு பாட்டின் பின்னும் எழுதப்பட்ட திணையும் துறையும் அவ்வவ் பாட்டிற்கு ஏற்றன அல்ல. தத்தம் புதுநூல் வழிகளால் உரைகாரர் புறநானூற்றுக்கு துறை கூறினார். எனினும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூல் ஆகலின் அவர் சூத்திரப் பொருளாக துறை கூறவேண்டும் என்றறிக' என்பது நச்சினார்க்கினியர் தரும் குறிப்பு. எனினும் இப்போ வழக்கில் உள்ள திணை, துறைக்குறிப்புக்கள் கொழுச் சென்றவழி துன்னூசி செல்லுமாறு போலப் படிப்போர் உணர்வை செய்யுளிலே இலகுவாகச் செல்லவைக்கும் தன்மை உள்ளனவாகக் காணப்படுகின்றன.

இத்திணைதுறைக் குறிப்புக்களின் படிக்கு இச்செய்யுட்களில் நுழைவோர் அறத்தின் பகுதியை உறத்தெரிவிப்பனவும் அரச நீதியை உரை செய்வனவும் வேளாண்மக்களின் தாழாண்மையினை இயம்புவனவும் வயம் புரிபோற்கு முந்துறும் அரசரை சந்து செய்வனவும் வண்மையும் தண்மையும் உண்மையும் திண்மையும் என்னும் இவற்றை பண்ணுகின்றனவும் மானந்தன்னை தாம் நன்குரைப்பதும், அருள் உடைமையினை மருளறத் தெரிப்பதும்..... (டாக்டர் உ.வே. சாமிநாதையர் முகவுரை புறநானூறு மூலமும் உரையும்)

என்றவாறான பொருள் விகற்பங்கள் பலவற்றோடும் கூடிய தமிழர் வாழ்வியல் மாண்புகளை நன்கறிதல் கூடும். இவற்றை அறிவார்க்கு திருக்குறள் கூறும் பொருட்பால் கருத்துக்கள் முழுவதும் இப்புறநானூற்றுக் கருத்துக்களுக்கு புனர் விளக்கம் அமைந்தவாறாகும் என்பதும் திருக்குறள் சங்கநூல் அல்ல எனினும் சங்கநூல் ஆகிய புறநானூற்றின் வழிமுதல் ஆதல் உண்மை என்பதும் நன்கு புலனாகும். திருவள்ளுவருடைய பொருட்பாலில் இறுதிப்பகுதி ஆகிய ஒழிபியல் கூறும் கருத்துக்கள் ஒன்றொழியாமல் அனைத்துமே புறநானூற்றுக் கருத்துக்கள் என்பது புலனாகும்.

புறநானூற்றுப் பொருள்நிலை இங்ஙனமாக இப்பொருள்களைச் செறித்து வழங்கும் செய்யுட்களின் நிலையும் அவை கொண்டிருக்கும் சொல்லழகு, பொருட் பொலிவுகளின் நிலையும் கவனித்தற்குரியவையாம். அகவல், வெண்பா, வஞ்சி, கலி என்ற நான்கே தொல்காப்பிய செய்யுள்களில்



வகுக்கப்பட்ட பாக்கள். இவற்றுள் அகவல்பா ஒன்றே சங்கப் புலவர்களுக்கு வாலாயமாய் இருந்துள்ளது. அதே அகவல் பாவிலேயே புறநானூற்றுச் செய்யுட்கள் எல்லாம் அமைந்துள்ளன. அகவல் பாவுக்கு சிற்றெல்லையாக மூன்று அடியும், பேரெல்லைக்கு வரையறை இன்றென்றும் செய்யுள் இலக்கண நூல்கள் கூறும் புறநானூற்றுச் செய்யுட்கள் குறைந்தது நான்கடி முதல் கூடியது இருபத்தைந்து முதல் முப்பது வரையும் தொகை கொண்ட அடிகளாக உள்ளன. இந்த அகவல் பாவில் ஈற்றடிக்கு முதலடி முச்சீராக அமையும் நேரிசை அகவல் வகைகளே இங்கு அதிகமாகக் காணப்படுகின்றன.

அதீத கற்பனைகள் இன்றி நீண்ட அடைமொழித் தொடர்களும் இன்றி கண்ட கண்ட காட்சிகளை அவற்றின் மெருகு மங்காமல் அதற்குச் சுட்டிப்பாக உரிய சொற்களினால் வர்ணிப்பது. சங்கப்புலவர்களின் தனித்துவப்பண்பு. அவ்வகையில் ஆகக் குறைந்த பட்ச எழுத்துத்தொகை உள்ள சொற்களே சொற்களும் பொருட்செறிவை சிக்கனமாக உணர்த்தும் வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை ஆட்சிகளும் அவர்களுக்கு வாலாயமானவை. இயல்பான பொருள் நிலைகளைக் கூர்ந்து நோக்கி அவற்றின் உண்மைப் பண்பு வெளிப்பட உரைப்பதில் அவர்கள் கை தேர்ந்தவர்கள். எந்தக் கருத்துத் தொடர்ச்சியை அது உள்ளபடி வெளிப்படுத்துவதற்கு எந்தச் சொல் வேண்டுமோ அந்தச் சொல்லையே பிரயோகிப்பது அன்றி எதுகை மோனை கருதி சொற்போக்கை மாற்றும் வழக்கம் அவர்கள் இடத்து கிடையாது.

" மீனுண் கொக்கின் தூவியன்ன வால் நரைக்கூந்தல்
முதியோர் சிறுவன் கழுநெறிந்து பட்டனன்
என்னும் உவகை ஈன்றஞான்றினும் பெரிதே"

பூங்கண் உத்திரையார் என்ற புலவரின் இப் புறநானூற்றுப் பாடலில் பஞ்சுப்பெட்டி போல நரைத்த கூந்தலை உடைய ஒரு கிழவி அவருடைய சிறுவன் மதயானை ஒன்றை எறிந்து கொன்ற முயற்சியில் தானும் இறந்தான் என்ற போர்க்களச்செய்தி வெளியாகிறது. கேட்ட கிழவிக்கு அவனை பெற்ற நாள் உவகையை விட பேருவகை பொங்குகிறது. இந்தக் கருத்தை விரிவு விளக்கம் நோக்கி அடைமொழிகளை வைத்து விபரிக்கவோ எதுகை மோனை கட்டமைப்பை பிரதானப்படுத்தவோ அந்தப்புலவர் கருதியதில்லை. அந்தக்கிழவி ஒரு வீரத்தாய் என்ற உணர்வை வெளிப்படுத்தும்

உணர்ச்சித்துடிப்பு மட்டும் அவரில் முந்தி நின்றிருக்கிறது. பொதுவில் சங்கப்பாடல்கள் எல்லாவற்றிற்கும் போல புறநானூற்றுச் செய்யுட் களுக்கும் இந்த முறை தனித்துவ பண்பாய் இருத்தல் குறிப்பிடத் தக்கதாகும்.

இப்புறநானூற்றுப் பாடல்களை பாடிய புலவர்களின் எண்ணிக்கை 154ஐ அடுக்கும். இவர்களால் பாடப்பட்டோர் தொகையும் 126ஐ அடுக்கும். இவ்வளவு புலவர்களும் ஏதேனும் ஒரு தேவை நோக்கி தமிழ் படித்தவர்களாகத் தெரியவில்லை. பெரிய பெரிய கல்வி ஸ்தாபனங்களை துணைக்கொண்டு படித்தவர்களாகவும் இல்லை. எழுந்தமானத்திற்கு கண்ட கண்ட இடங்களில் கருத்தை கவர்ந்த காட்சிகளை அந்தந்த இடத்தில் வைத்தே வர்ணித்தவர்களாகக் காணப்படுகின்றனர். செய்யுள்கள் இயற்றியதன் மூலம் அவர்களுக்கு சீவனோபாயம் இருந்ததாக அகச்சான்றுகள் புறச்சான்றுகள் உண்டேனும் அவர்கள் போக்கைக் கவனிக்கும்போது சீவனோபாயம் நோக்கமாக அவர்கள் பாடற்றொழிலை மேற்கொண்டார்கள் என்பதற்குமில்லை. உணர்வுக் கதிப்பினாலும் புலமைவிறுக்கினாலும் உந்தப்பட்டெழும் நானசையால் பாடியவர்களாகவே காணப்படுகின்றனர். தன் குடும்ப வறுமையை ஒரு உபகாரி முன் தெரிவிக்கும் பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர்

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்....."

என்று பாடும்போது அவர் உணர்வில் விஞ்சி நின்றது உபகாரியாகிய குமணனை பிரீதிப்படுத்தும் முகாந்திரம் அல்ல தமது இல்லத்து வறுமை அனுபவத்தை சுவைத்துச் சுவைத்து கூறும் நானசை மட்டுமே என்பது இலக்கியக் கண்ணுளார் காணத்தவறார்.

அவர்கள் நானாசையால் பாடினார்களே அன்றி பொருள் நசையால் பாடினார்கள் அல்ல என்பதுற்கு புறநானூற்றுச் செய்யுட்களிலே ஆதாரம் உண்டு. பெருந்திணையில் பரிசில் விடை என்ற துறையுல் பெருஞ்சித்திரனார் பாடிய,

"இரவலர் புரவலர் நீயுமில்லை" ......

என்ற 162ம் பாடல் தகுதி அற்ற கொடை நிராகரிக்கப்பட்டதும் அதே நிலையில் பரிசில் துறையில் பெருஞ்சித்திரார்.



"நின்றயந்துறை நற்கும்......."

என்ற 163ம் செய்யுளில் தான் பெற்றுக் கொண்டு வந்த பரிசிலை வைத்துப் பார்க்காமல் எல்லோர்க்கும் விநியோகிக்கும்படி பெருஞ்சித்திரனார் மனைவிக்கு அறிவுறுத்திய தன்மையும் இங்கு கவனிக்கப்படும். இப்புலவர்களில் இடையர், அந்தணர், மருத்துவர் முதலிய எல்லாத் தரத்தின்ரும் இடம்பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும். இவர்களாற் பாடப்பட்டோர் பெரும்பாலும் குறுநில மன்னர்களும் வள்ளல்களும் ஆவார். திருவள்ளுவர் கூறும் ஒப்புரவு, ஈகை பற்றிய இலக்கணங்களுக்கு இலட்சிய புருஸர்கள் இவர்கள். அது என்னவோ அக்கால விசேடம் ஒவ்வொருவரும் பின்னுக்கும் பிறகுக்கென்று ஒதுக்கிவையாத வாழ்க்கை உடையோராய் இருந்துள்ளனர். தமிழக வாழ்வு முற்ற முடிய அறவாழ்வு என்ற கோட்பாட்டுக்கும் இவர்களே உதாரண புருஸர்களாய் இருந்துள்ளனர்.

இவ்வகையில் தமிழர் பண்பாடு தழுவிய அறம், பொருள், சார்ந்த விழுமியங்கள் அனைத்தையும் தன்னுட் கொண்டிருக்கும் இப்புறநானூற்றுக் கட்டமைப்பு பகுதி பகுதியாகநோக்கி உணரத்தகும்.

---

# காணி நிலம்

காணி நிலம் வேண்டும் – பராசக்தி
காணிநிலம் வேண்டும் – இங்கு
சுன்னை நகரினிலே நன் – மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் – அந்தக்
காணி நிலத்திடையே – ஓர் நூலகம்
கட்டித் தரவெண்டும் – அங்கு
வீதி அருகி னிலே – நன்மரச்
சோலை நடுவினிலே

பத்து பன்னிரண்டு கணனி – கல்வி
பாவனைக்கு வேணும் –நல்ல
முத்துச் சுடர் போல நூலகம் – நனி
முன்னேறி வரவேணும் – அங்கு
நித்தம் தமிழோசை சற்றே – வந்து
நிலவும் நிலைவேணும் – மக்கள்
சித்தம் மகிழ்ந்திடவே நன்றா – னவை
சித்தி யாதல் வேணும்.

நாட்டு வளமோங்க அங்கே – பல
நிகழ்வு தினம்வேணும் – மக்கள்
கூட்டு முயற்சியிலே – நூலகம்
கூடிவர வேணும் – இந்த
மூட்டு(ம்) முயற்சியிலே அம்மா – துணை
மேவியுற வேணும் – எங்கள்
தேட்ட மிதுவெனவே வையத்தார் – இதைத்
தேடி வரவேணும்.

"வாசகபாரதி"

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 01

மாணவர்களின் தமிழறிவு, பொதுஅறிவு போன்றவற்றை மேம்படுத்த உதவும் வகையில் இப்போட்டி அமையும். பின்வரும் சதுரக்கட்டங்களை ஒரு தாளில் பிரதி செய்து சரியான விடைகளை நிரப்பி அத்துடன் இவ்விதழில் இணைக்கப்பட்டுள்ள குறுக்கெழுத்துப் போட்டி விபர அட்டையில் உங்களைப் பற்றிய தகவல்களையும் நிரப்பி 30.09.2007 க்கு முன் **வெள்ளிமலை, பொது நூலகம் சுன்னாகம்** என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். சரியான விடைகளை எழுதும் மூவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு பெறுமதியான புத்தகப் பரிசில்களை அன்பளிப்பாகப் பெறுவார்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 (X) | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 (X) | 18 |
| 19 | 20 (X) | 21 | 22 | 23 | 24 |
| 25 (X) | 26 (X) | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 (X) | 35 | 36 |

**இடமிருந்து வலம்.**

01. சிவனார் மகன்.
13. தபால். கொடுக்கும் முன்னரே குழம்பியுள்ளது.
27. திருமணமானவன்.
31. சுற்றுச் சூழலைக் கெடுப்பது.
35. வேகம் எனவும் சொல்லலாம்.

**மேலிருந்து கீழ்**

01. இடைநிலைக் கல்விப் பாடத்திட்டத்தில் கட்டாய பாடங்களில் ஒன்று.
02. பிணமும் வாய் திறக்குமாமே. பயத்தால் குழம்பிப் போயுள்ளதோ?
03. சில வருடங்களுக்கு முன்புவரை நடைமுறையிலிருந்த உள்ளூராட்சி அமைப்புக்களில் ஒன்று.
04. இலக்கண நூல்களுள் ஒன்று.
06. இசை அப்பியாச வரிசைகளில் ஒன்று.

— — — — — — — — — — — — — —x—x—x—x—x—x—x—x—x—x

*விடையளிப்பவர் விபரஅட்டை*

முழுப் பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

பாடசாலை : ..............................

வகுப்பு : ..............................

..............................

குறுக்கெழுத்துப் போட்டி இல. 01 — கையொப்பம்.





# நெஞ்சில் நிலைத்துவிட்ட நீங்காத நிஜங்கள்

அன்றுமுதல் இன்றுவரை
அல்லலுறும் நம் இனத்தின்
அல்லல்கள் அலறல்கள்
அயல் அறியாதவை
ஊர்விட்டு உடமை விட்டு
உயிர்மட்டும் போதுமென்று
ஊரூராய் நாம் அலைந்த
அலைச்சல்கள் யாரறிவார்?
நீங்காத நினைவுகளாய்
நிலைத்துவிட்ட நினைவுகள்
ஒன்றல்ல..... இரண்டல்ல.....
குண்டுகளும் செல்களும்
எமனாக எமைவிரட்ட
இடம் விட்டு ஓடினோம்.
செம்மணி வீதி வழியே...
பெட்டியும் படுக்கையும்
வண்டியிலே ஏற்றிக் கொண்டு
மாடாக நாமிருந்து
வண்டிதனை இழுத்துச் செல்ல
இலட்சாதி இலட்சம் பேருக்குள்
நாமும் ஒருவராய்....
நட்டநடு இரவினிலே
நாவற்குழி பாலம் கடந்தோம் - இதனுள்
முடமானோர் எத்தனை பேர்?
பிணமானோர் எத்தனை பேர்?
'அம்மாவைக் கண்டீரா'- 'என்
அப்பாவைக் கண்டீரா' - 'என்
தங்கையைக் கண்டீரா'
வீதியோரமெல்லாம்
ஓலக்குரல்கள் - இவை
உறவுகளைப் பிரிந்தோரின்
அவலக் குரல்கள்.
அரிசி தேடி அடுப்பெடுத்து
கஞ்சி காய்ச்ச அடுக்குப்பண்ண...
ஆட்லறி அடிதொடங்கும்:
ஒதுங்கிவிட்டு வெளியே வர,
கஞ்சியெல்லாம் புக்கையாகும்.
பயந்து பயந்து ஓடியதால்
பசியும் பறந்துவிடும்.
ஊரிலே நமக்குதவி - நம்
ஊர்வயல் நிலங்கள்.
சந்தைக்குப் போனாலே சாப்பாடு.
என்றிருந்த சந்ததி நாம் - இப்போ
ஊர் விட்டு வந்து விட்டோம்.
உணவிற்கு என்ன செய்வோம்
கோயில்களும் பள்ளிகளும்
எங்களது புகலிடங்கள்
வறுமைகளும் நோய்களும்
எங்களது உடமைகள்.
கல்வியும் கலாச்சாரமும் - அன்று
கலைந்துவிட்ட கனவுகள்
வைத்தியசாலைகள் எல்லாம் - அன்று
நோய் காவிகள்
காய்ச்சலிற்காய் மருந்தெடுத்தால்
வயிற்றுளைவும் சேர்ந்துவரும்.
கல்வி கற்க முடியவில்லை
கல்வி கற்குமிடமெல்லாம்
அகதிகளின் தங்குமிடம் - அன்று
கல்வி கற்ற உள்ளங்கள் எல்லாம்
கடந்து வந்த நிலமையின்
கசப்பான நினைவுகள்.
இரவென்று வந்துவிட்டால்
விமானங்களின் வாணவேடிக்கை!
உலக நாட்டு விமானம் எல்லாம்
எம்மீது பயிற்சி பெறும் - இதனால்
இரவுகள் பகல்கள் பல
பங்கருக்குள் கழிந்து விடும்
குண்டுச் சத்தம் ஓய்ந்து விட்டால்
ஓலச்சத்தம் ஆரம்பிக்கும் - இதனால்
அழுகுரலும் அவலங்களும்
ஒருவருக்கும் புதிதல்ல.
ஓடி ஓடி நாம் அன்று
இழந்தவைகள் பற்பல
தேடித் தேடி நாம் அன்று
பயின்றவையும் பற்பல - அன்றிருந்த
உணவுத்தடை, மருந்துத் தடை அத்தனையும்
எமக்கென்று அளித்தது எம்மூர் வளங்களை.
சீனிக்காய் பனங்கட்டி
பனம்பழம்தான் சவர்க்காரம்
மண்ணெய் எமக்கில்லை
பட்ட மரங்களும், ரயர்களும் தான்
வீட்டில் தஞ்சம்
நுளம்பிலிருந்து நாம் தப்ப
வேப்பம் புகையுண்டு
செத்துச்செத்துப் பிழைத்தாலும்
அதில் ஒரு இன்பங் கண்டோம்.
மேலாலும் கீழாலும் அடி உதை எமைத் தொடர
நோய்களும் பிணிகளும் எமனாக எமைவிரட்ட
எத்தனை இன்னல்கள் எத்தனை இடர்கள்.
அத்தனையும் களைந்தொழிக்க
கடல் கடந்து சென்றோர் பலர் - அவரில்
தலையின்றி கடலில் மிதந்து வந்தோர் கதையுமுண்டு.
அடிமேல் அடிவாங்கி:
ஊரூராய் நாம் அலைந்து
இழப்பதற்கு எவையுமின்றி
நிர்க்கதியாய் நின்ற எமக்கு
விடிவெள்ளி ஒன்று
தொலைவினில் தெரிகின்றது.
தொலைதூர விடிவெள்ளி
எமக்கருகே எழுந்து வர
ஏங்கியது எம்மினம். அன்று
.........இன்றும்
ஏங்குகின்றது எம்மினம்.

அ. பிரேமச்சந்திரா



# பொது அறிவுப் போட்டி 2007

## பரிசில்கள் பெறுவோர் விபரம்

| மாணவர் பெயர் | பாடசாலை | தரம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 01. செல்வன். ச. சக்திபாலன் | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 10 | 1ம் இடம் |
| 02. செல்வி. ச. சக்திதாஜினி | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 11 | 2ம் இடம் |
| 03. செல்வி. ஜெ. தட்சாயினி | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 10 | 3ம் இடம் |
| 04. செல்வன். எஸ் சயேலன் | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 11 | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 05. செல்வி. ச. சக்திதர்சினி | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 08 | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 06. செல்வி. செ. சங்கீதா | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 10 | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 07. செல்வி. க. நேர்த்திகா | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 08 | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 08. செல்வன். செ. சங்கீர்த்தன் | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 09 | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 09. செல்வி. செ. சங்கீர்த்தனா | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 08 | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 10. செல்வி. ச. கோபிகா | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 08 | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 11. செல்வி. ஆ. கலைவாணி | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 09 | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 12. செல்வி. செ. துவாரகா | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | 09 | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 13. செல்வி. நி. சத்தியா | யா/இணுவில் இந்துக்கல்லூரி | A/L | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 14. செல்வி. பா. லக்சனா | யா/இணுவில் இந்துக்கல்லூரி | A/L | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 15. செல்வி. தர்சிகா | யா/இணுவில் இந்துக்கல்லூரி | A/L | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 16. செல்வன். த. தனஞ்சயன் | யா/இணுவில் இந்துக்கல்லூரி | A/L | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 17. செல்வன். யூ. யானுராஜ் | யா/இணுவில் மத்தியகல்லூரி | 11 | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 18. செல்வி. க. கலைவாணி | யா/இணுவில் மத்தியகல்லூரி | A/L | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 19. செல்வி. சி. லாவன்யா | யா/இணுவில் மத்தியகல்லூரி | A/L | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 20. செல்வன். சி. கரிகாலன் | யா/இணுவில் மத்தியகல்லூரி | A/L | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |
| 21. செல்வி. உ. கிருஷ்ணா | யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் | 11 | ஆறுதல் பரிசில் (சான்றிதழ்) |

## 2007ல் அரச சேவையில் 25வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களைக் கௌரவித்தல்

| | |
|---|---|
| 01. திருமதி. ச. சொக்கலிங்கம் | 08. திருமதி. ச. கமலநாதன் |
| 02. திரு. கே. தவராசா | 09. திரு. சு. செல்வராசா |
| 03. திரு. க. இராமச்சந்திரன் | 10. திரு. இ. சுப்பிரமணியம் |
| 04. திரு. த. நிர்மலானந்தம் | 11. திரு. கா. தேவமனோகரன் |
| 05. திருமதி. சி. தர்மராஜசிங்கம் | 12. திரு. மா. கனகலிங்கம் |
| 06. திரு. S.O. சுகுணராஜ் | 13. திரு. சு. அல்பிரட் |
| 07. திரு. க. சௌந்தரராஜன் | 14. திரு. பி. யேசுராசா |

## பாடசாலைகளின் சுற்றுச்சூழல் சுகாதாரம் தொடர்பான மதிப்பீடு பிரிவு ரீதியாக பரிசில்கள் வழங்குதல் தொடர்பான விபரம்

பிரிவு 1 :- 1) யா/ இராமநாதன் கல்லூரி 1ம் இடம்.
2) யா/ இணுவில் இந்துக்கல்லூரி 2ம் இடம்.

பிரிவு 2 :- 1) யா/ புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பாடசாலை 1ம் இடம்.
2) யா/ கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை 2ம் இடம்.

### *சனசமூக நிலையங்கள் ச.ச.நிலைய முன்பள்ளிகள் ஆகியவற்றுக்கிடையிலான முகாமைத்துவப்போட்டி - 2007*

**சனசமூக நிலையங்கள்**

1) இணுவில் பொதுநூலகமும் சனசமூக நிலையமும் – 1ம் இடம்
2) ஏழாலை தெற்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் – 2ம் இடம்
3) ஜனசக்தி சனசமூக நிலையம் – 3ம் இடம்

**முன்பள்ளிகள்**


1) ஏழாலை ஸ்ரீமுருகன் முன்பள்ளி – 1ம் இடம்
2) சுப்பிளான் வடக்கு விக்னேஸ்வரா முன்பள்ளி – 2ம் இடம்
3) சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலைய முன்பள்ளி – 3ம் இடம்





# சிறீகரன் புக் & பிறின்டிங் சென்ரர்



- பாடசாலை உபகரணங்கள்
- இந்திய நாவல்கள்
- பயிற்சிப் புத்தகங்கள்
- காகிதாதிகள்
- திருமண வாழ்த்து மடல்கள்
- உதயன்
- வீரகேசரி
- மித்திரன்
- வலம்புரி
- தினக்குரல்
- ஈழநாடு
- தினகரன்
- SUNDAY OBSERVER
- DAILY NEWS
- METRO NEWS



- கொம்பியூட்டர் பிறின்டிங்
- லெமனேற்றிங்
- ஷ்கிறீன் பிறின்டிங்
- போட்டோ கொப்பி
- ஒப்செற் பிறின்டிங்
- புக் வைன்டிங்
- போட்டோ பெரிதாக்கல்



புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பழரசத் தொழிலகம்

# ஜசுபி தயாரிப்புக்கள்

உள்ளூர் பழத்தில் இருந்து முற்றிலும் சுகாதார முறையில் தயாரானது

மாம்பழ கோடியல்
பழக்கலவை கோடியல்
தேசிக் கோடியல்

நெல்லி ரசம்
மாம்பழ ஜாம்
விளாம்பழ ஜாம்
ஸ்ரோபரி ஜாம்
பழக்கலைவை ஜாம்

மாம்பழ சட்னி, தேசி ஊறுகாய்,
மோர் மிளகாய்

தக்காளி சோஸ்
மிளகாய் சோஸ்

எமது உற்பத்திப் பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

